



# 50 பொன்விழா மலர்

28.03.2004

உ
சிவமயம்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்



நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே – எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்களெங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

*சி.வை.தா*

உ

சிவமயம்

# பொன்விழா சிறப்புமலர்

**வண்ணை**

**சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயில்**

**சைவசமய அபிவிருத்திக் கழகம்**

**யாழ்ப்பாணம்.**

**1953 - 2003**

| | | |
|---|---|---|
| நூல் | : | "பொன்விழா மலர்" |
| வெளியீடு | : | வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் |
| வருடம் | : | 2004 |
| பக்கம் | : | IV +18 + 52 |
| அளவு | : | B5 |
| மலராசிரியர்கள் | : | சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி<br>திரு. இரா. செல்வவடிவேல். |
| பதிப்பு | : | கஜன் பிறிண்டேர்ஸ்,<br>உடையார் லேன்,<br>கொக்குவில் கிழக்கு. |

# உள்ளே.....


| | |
|---|---|
| அருளாசிச் செய்தி | 01 |
| ஆசியுரை | 02 |
| பிரார்த்தனை உரை | 04 |
| ஆசியுரை | 05 |
| வாழ்த்துச்செய்தி | 06 |
| பூந்தமிழ்ப் பாமாலை | 08 |
| சைவசமய அபிவிருத்திக்கழகம் | 10 |
| கடந்தகாலச் செயற்பாட்டறிக்கை | 12 |
| நிர்வாகசபை | 16 |
| முக்கிய பதவி வகித்தோர் | 17 |
| வாழ்த்துப்பா | 18 |
| எமது வளர்ச்சிப் பாதையில் | 21 |
| தருமம் | 23 |
| கல்வியின் நோக்கம் | 30 |
| ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தின நியமம் | 38 |
| விவாகவியல் | 40 |
| சைவசமய வாழ்வு | 43 |
| அறிவியலும் அருளியலும் | 46 |
| நன்றிகள் | 48 |
| ஆயுட்கால அங்கத்தவர்கள் பட்டியல் | 49 |

உ
குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
– இரண்டாவது குருமஹா சந்நிதானம் –

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களின்**

# அருளாசிச் செய்தி

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் இன்று தனது பொன்விழாவினைக் கொண்டாடுவதனையிட்டு பேருவகையடைகிறோம்.

ஐம்பது ஆண்டு காலமாக நிறைவான சமயப்பணியாற்றிவரும் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பணிபோற்றுதற்குரியது. ஆண்டுதோறும் சமய அறிவு, கலாசாரப் போட்டிகளை நடாத்தி, சமய விழுமியங்களை மாணவர்களிடையே பரவலாக்குகின்ற பணியினைச் செவ்வனே ஆற்றிவருவதன் மூலம் எம்சமய சம்பிரதாயங்கள் பண்பாடுகளை இளைய தலைமுறையினருக்கு சிறந்த முறையில் கையளிக்கும் சேவை அனைவரது வரவேற்பையும் பெற்றுள்ளது.

கழகத்தினுடைய பணிக்குத் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் கழக உறுப்பினர்களின் பணி சிறப்புடையது. சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்களுடைய சேவை விஷேடமாகக் குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும். கழகத்தினுடைய சேவை இன்னும் பல நூற்றாண்டு காலம் தொடரவும் வெளியிடுகின்ற மலர் சிறப்பான முறையில் வெளிவரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் மூலம் சைவப்பணியாற்றிவருகின்ற கழக உறுப்பினர்கள் மற்றும் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பானாக.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

உ
சிவமயம்

**பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்** அவர்களின்
– கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் –

# ஆசியுரை

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவிலைத் தளமாகக்கொண்டு செயற்பட்டுவரும் சைவசமய அபிவிருத்திக்கழகம் இளம் தலைமுறையினரிடையே சைவசமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கடந்த ஐம்பது வருடங்களாகச் சிறந்த சமயப்பணியாற்றிவரும் இக்கழகம் பொன்விழாக்காண இருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைவதோடு எனது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மனநிறைவு கொள்கின்றேன்.

நல்லைநகர் நாவலர் தமது சைவசமயப் பணிகளை முன்னெடுப்பதற்கு வண்ணார் பண்ணையையே தளமாகக்கொண்டு செயற்பட்டார். அவரது பெயரில் உருவாகிய நாவலர் பாடசாலைக்கருகே அமைந்துள்ள இக்கோயிலில் சைவசமய அபிவிருத்திக்கழகம் அவர் காட்டிய வழியில் பெரும்பணியாற்றி வருவதையிட்டு சைவ உலகம் பெருமைகொள்கின்றது. நாவலர் பாடசாலைச் சமூகத்தினரதும் இவ்வாலய தர்மகர்த்தா சபையினரதும் அனுசரணை யோடு இக்கழகம் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் இளைஞர்கள் உற்சாகத்துடன் பங்குகொண்டு வருகின்றனர். சைவத்திற்கும் தமிழிற்கும் அர்ப்பணிப்பு உணர்வுடன் இளம் தலைமுறையினரின் நலன்கருதி அரியபல பணிகளை மேற்கொண்டு வரும் சைவபரிபாலன சபைத் தலைவராக விளங்கும் சைவப்புலவர் வ.கந்தசாமி இக்கழகத்தை ஆரம்பிப்பதில் முதன்மையாகச் செயற்பட்டவர்களில் ஒருவராக விளங்கி, அதன் தலைவராகவும் பலகாலம் பணியாற்றியுள்ளார். இக்காலப் பகுதியில் இக்கழகத்தின் போஷகராகவிருந்த வியாகரண சிரோமணி அமரர் பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராமசாஸ்திரிகளின் குருவருளும் ஆதரவும் இக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களது வழிகாட்டலில் இக்கழகம் செயற்குழுவின் ஒத்துழைப்போடும் உறுப்பினரது ஆதரவோடும் சைவசமய அபிவி ருத்தியில் அதிக கவனம் செலுத்திவருவது குறிப்பிடற்பாலது.

இக்கழகத்தின் பணிகளில் சிறப்பாக சைவச்சிறார்களுக்கு ஆலயத்தில் சமயவகுப்பு, பண்ணிசை வகுப்பு ஆகியவை நடைபெற்றுவருவது குறிப்பிடற்பாலது. மேலும் வருடந்தோறும் சிவராத்திரியையொட்டி, சமய அறிவுப்போட்டிகளை மாணவரிடையே நடத்தி அப்புண்ணிய தினத்தில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி, உற்சாகத்தை ஏற்படுத்தி வருகின்றது. சமயஞ்சார்ந்த அறிவு வளர்ச்சிக்கேற்ற கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் ஆகியவையும் இக் கழகத்தின் அனுசரணையோடு நடைபெற்றுவருகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். நாவலர் பாடசாலையில் நடைபெறும் சமயவிழாக்கள், மகாநாடுகள் சிறப்புற நடைபெற இக் கழகம் உதவிவருகின்றது. இவ்வாலயச் சுற்றாடலைச் சேர்ந்த இளைஞர்கள் இக்கழகத்தின் உறுப்பினர்

களாக விளங்கி, இக்கழகம் சிறப்புற இயங்க உதவி வருகின்றனர். மார்கழி மாத திருவெம் பாவை நாட்களில் வீதிபஜனையை ஒழுங்குசெய்து சைவச்சிறார்களிடையே சமய உணர்வை ஏற்படுத்துவதில் முன்னோடியாக இக்கழகம் பணியாற்றி வருகின்றது. இக்கழகத்தின் இத்தகைய சமயப் பணிகளின் பரிமாணத்தை எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளத்தக்கதாக 1978ஆம் ஆண்டு வெள்ளிவிழாச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டதைப் போன்று, தற்சமயம் பொன்விழாவை முன்னிட்டு வெளிவரும் மலரும் சிறந்து விளங்க எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கழகத்தின் அரிய முயற்சியினால் ஆறுமுகநாவலர் இலக்கண வினாவிடை (மறுபதிப்பு) மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு, சகலகலாவல்லி மாலை, தோத்திரத்திரட்டு ஆகிய நூல்கள் சமய அறிவு விருத்திக்காகவும் தமிழ் மொழித்தேர்ச்சிக்காகவும் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இவையாவற்றுக்கும் மேலாக இக்கழகம் ஆலயத்தில் சிறந்ததொரு நூலகத்தையும் அமைத்துள்ளது. இளைஞர்கள் உணர்வுபூர்வமாக மகோற்சவ காலத்தில் ஆலய சேவையில் தம்மை ஈடுபடுத்திவருவதும் கழகத்தின் சிறந்த பணியாக அமைகின்றது.

இவ்வாறாக சைவசமய வளர்ச்சிக்கென பெரும்பணியாற்றிவரும் இக்கழகம் எதிர்காலத் தில் வைர விழாக்காணும் வகையில் மேன்மை பெறவேண்டும் என எல்லாம் வல்ல ஸ்ரீகற்பக விநாயகப் பெருமானது திருவருளை முன்வைத்துப் பொன்விழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் ஆசிகூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். பொன்விழா நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் இக் கழகத்தினர்க்கும் ஏனையோருக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் பொலிவதாக!

**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

ப. கோபாலகிருஷ்ணஐயர்.

உ
சிவமயம்
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

யாழ்ப்பாணம் – சைவ பரிபாலன சபைத் தலைவர்
**சைவப்புலவர் வ. கந்தசாமி** அவர்களின்

# பிரார்த்தனை உரை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

எல்லாம் வல்ல விநாயகர் திருவருளினால் வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பொன்விழா மலர் வெளிவருவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரைநூற்றாண்டு காலமாக எவ்வித குழப்பமும் இன்றித் தமது சீரிய பணிகளை முன்னெடுத்துச் சென்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

இக்கழக உறுப்பினர்களாகிய இளைஞர்கள் அனைவரும் ஒன்றுபட்டு கடமை புரிகின்றனர். சிவசின்னங்களுள் ஒன்றாகிய விபூதியைத் தயாரித்து வழங்கியமை பெரிதும் பாராட்டுக்குரியது.

மேலும் இளைஞர்களையும், சிறார்களையும் சமயவாழ்வில் ஈடுபடுத்தவும் நன்னெறியில் செலுத்தவும் இவ்வாலயத்தில் அமைக்கப்பட்ட சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பொன்விழா சிறப்புமலர் மலருவதற்கு எனது அன்புகலந்த பிரார்த்தனை உரையை வழங்குவதோடு இக்கழகம் இன்னும் பல நற்பணிகள் புரியவேண்டும் என விநாயகப் பெருமானை வணங்குகின்றேன்.

சைவப்புலவர் வ. கந்தசாமி

உ
சிவமயம்

வண்ணை – சாந்தையர்மடம்
ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் தர்மபரிபாலன சபைத்
**தலைவர் செ. சுப்பிரமணியம்** அவர்களின்

# ஆசியுரை

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் தனது பொன்விழா கொண்டாடுவதையும், அதற்கு கோவில் தர்ம பரிபாலனசபை ஆசியுரை வழங்குவதையுமிட்டு சபை மகிழ்ச்சியடைகின்றது.

கழகத்தின் ஐம்பது வருட காலத்தில் மன்ற இளைஞர்கள் எத்தனையோ இன்னல்களுக்கும், தொய்வனவுகளுக்கும் ஈடுகொடுத்து, கழகம் அமைக்கப்பெற்ற நோக்கத்திற்காக, சரியை, கிரியை ஆகிய நெறிகளுக்கமைய, சிறுவர் சிறுமியற்கு சமய தீட்சை, சமயப்போதனை, சமயப் பரீட்சை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை, நால்வர் குருபூசை, புராணப் படிப்பு, ஆலய உற்சவங்கள் முதலியவற்றை நடாத்தி நிறைவேற்று கின்றனர்.

அவர்களது பணி சிறக்கவும், பொன்விழாவினையொட்டி வெளிவரவிருக்கும் பொன்விழா மலர் நறுமணம் வீசவும் கற்பக விநாயகர் துணை நிற்க எமது ஆசியை வழங்குகின்றோம்.

உ
சிவமயம்

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர்

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

இந்துக்கள் அனைவரும் தங்கள் வழிபாட்டில் முதலில் விநாயகப் பெருமானையே வழிபடுகின்றார்கள். ஆலயக் கிரியைகள், வீட்டுக் கிரியைகள் ஆகிய அனைத்துக் கிரியைகளிலும் முதல் வணக்கம் விநாயகப் பெருமானுக்கே செலுத்தப் படுவது மரபு ஆகும். செய்கின்ற காரியங்களில் ஏற்படுகின்ற இடையூறுகளை நீக்கி காரிய சித்தி ஏற்படுவதற்கு துணை செய்பவர் விநாயகப் பெருமான் ஆகையால் அவருக்கு விக்கினேஸ்வரர் என்ற பெயர் வழங்கப்படுகின்றது.

கலைகளின் தெய்வமாக கலைமகள் போற்றப்படுவது போல, அறிவுத் தெய்வமாக விநாயகப் பெருமானே துதிக்கப்படுகின்றார். விநாயகப் பெருமானை நாள் தோறும் தொழுது வணங்குபவர்களுக்கு ஞானம் தானாகவே வரும் என்பதை,

**"வேழ முகத்து விநாயகனைத் தொழ**
**வாழ்வு மிகுந்து வரும்"**

என்ற பாடல் விளக்குகிறது.

இந்துக்களின் ஞானக் களஞ்சியமாகிய தைத்திரிய உபநிடதம் ஆன்மாவிற்கு பஞ்சகோசங்களைக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு கோசங்களிற்கும் அதிபதியாக ஒவ்வொரு தெய்வத்தின் பெயர்கள் சுட்டப்படுகின்றன. அண்மைய கோசத்திற்கு திருமாலும், பிராணமய கோசத்திற்கு சிவனும், மனோமய கோசத்திற்கு அம்பாளும், விஞ்ஞானமய கோசத்திற்கு சூரியனும், ஆனந்தமய கோசத்திற்கு விநாயகப் பெருமானும் அதிபதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

சைவ சேனாதிபதி ஆறுமுகநாவலர் பெருமானின் சமயப் பணிகளுக்கு வண்ணார்பண்ணையில் வாழ்ந்த சைவ மக்களே களம் அமைத்துக் கொடுத்தார்கள். நாவலர் பாரம்பரியத்தைப் பின்பற்றி இப்பிரதேசத்திலிருந்து அருளாட்சி செய்யும் வண்ணை - சாந்தையர்மடம் கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்

கழகம் மாணவர்களிடம் சமய அறிவை ஊட்டும் பணியில் அளப்பரிய சேவைகளைச் செய்து வருகின்றது. சமயபாடப் பரீட்சைகளை நடாத்திப் பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கி வருகின்றார்கள். பேச்சுப்போட்டி, பண்ணிசைப் போட்டி என்பவற்றை நடாத்தி மாணவர்களிடையே சமய அறிவினை வளர்த்து வருகிறார்கள்.

சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் செய்துவரும் சமயப் பணிகள் மேலும் சிறப்படையவும், இவர்களால் வெளியிடப்படும் பொன்விழா மலர் சிறந்ததோர் சமய சஞ்சிகையாக மலரவும் ஞான விநாயகப் பெருமானின் திருவருளினை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

உ
சிவமயம்

வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் ஆலய
சைவசமய அபிவிருத்திக் கழகப் பொன்விழா வாழ்த்துப்

# பூந்தமிழ்ப் பாமாலை

1) சீரோங்கு சைவநெறி செகத்தே தேங்கிச்
சிவமோங்கு நிலமாகச் சிறந்தே வீங்கப்
பாரோங்கு சைவஅபி விருத்திக் கென்றோர்
பணியோங்கு கழகமதைப் பரிந்தே தாங்கிப்
பேரோங்கு சிவநெறியைப் பேணு கோவிற்
பிறையோங்கு பொன்விழா பொலிந்தே ஓங்கக்
காரோங்கு கரிமுகத்துக் கடவு ளான
கற்பகனின் தாளிணைகள் காப்ப தாமே.

2) வளப்பமொடு குருபூசை பிரார்த்த னைகள்
வண்ணமுறு கோலமிடல் வளநூல் நிலையம்
விளப்பமுள தேவாரம் புராண படனம்
விரிசமய உபந்நியாசம் வீதி பஜனை
தளப்பமில பரீட்சையொடு தகைமைப் பரிசும்
தரணிதந்து ஐம்பதாண்டு தளரா அருளால்
அளப்பரிய சேவைதனை ஆற்று கழகம்
அவனிதனில் வாழிநனி பன்நூ றாண்டே.

3) நாவலரன் றெம்சமய நெறியைக் காக்க
நடந்துதிரி பேறுமிளிர் நலமார் பதியில்
பாவலரும் நாவலரும் பண்வல் லாரும்
பக்திநெறி தமிழ்ப்புலமை கைவந்தாரும்
ஆவலுடை அடியவரும் அணியாய்ச் சேர்ந்து
அமைத்துப்பணி யாற்றிவரு அறிவார் கழகம்
காவலது தருகற்பக விநாய கனார்
கருணையினாற் பல்லாண்டு வாழி வாழி.

4) சைவமதிற் புலமையுள கந்த சாமி
தன்னலமில் சேவையினாற் தழைத்த கழகம்
வையமதில் சைவர்களின் வாழ்வை ஏற்றி
வளமான பொன்விழா வைரவி ழாக்கள்

உய்வுபெறு பலநூறு ஆண்டுவி ழாக்கள்
உலகதனிற் கண்டுபணி உவப்போ டாற்றத்
தெய்வபலம் தருகற்பகன் திருத்தாள் போற்றித்
தினம் தொழுவம் தீந்தமிழ்போற் திகழ்ந்தே வாழி

5) திருமருவு வண்ணைநகர் செய்ததவப் பேறாய்ச்
சிவநெறியின் தமிழ்மொழியின் சிறப்பை யூட்டித்
தருமநெறி வளர்சாந் தையர் மடத்துச்
சைவஅணி கலமாகச் சகத்தில் நாட்டி
பெருமையொடு வாழவழி பாரிற் காட்டும்
பேரமுத கழகமெனப் பிறர்பா ராட்ட
மருவிவரு நவீனமுறைக் கல்வி காட்டி
மாஅறிவை வளர்த்தி∴து வாழிபல் லாண்டே.

6) முந்துதிரு முறைவாழி மறையும் வாழி
மூத்தசிவா கமம்வாழி முழவம் வாழி
வந்துபணி புரிதொண்டர் வளமே வாழி
வகுத்தகுரு முறைவாழி வண்மை வாழி
சிந்துமழை வாழியா னினமும் வாழி
சிவாச்சார்யர் வாழிசிவ னடியர் வாழி
சந்தவெழிற் தமிழ்வாழி சைவம் வாழி
சமயஅபி விருத்திதரு கழகம் வாழி

- சுபம் -

ஆக்கம்:
இராசையா குகதாசன்
நாயன்மார்கட்டு

உ
சிவமயம்

# சைவசமய அபிவிருத்திக்கழகம்

**"வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்"**

எல்லாம் வல்ல விநாயகர் திருவருளால் சைவசமய அபிவிருத்திக் கழகம் ஐப்பது ஆண்டுகளாகப் பணியாற்றி, இன்று பொன்விழாவைக் கொண்டாடும் நிலைகண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

இக்கழகம் 14.01.1953ல் தைப்பொங்கல் திருநாளில் கூட்டுப்பிரார்த்தனைச் சபை என்னும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் நோக்கங்களுக்கு அமைவாக சைவசமய வளர்ச்சிக்கு உதவுதல் ஆகும். மேலும் இளைஞர்களை சைவப்பணியில் ஊக்குவிப்பதற்கு இச்சபை பெரிதும் உதவியது என்றால் அது மிகையாகாது. கூட்டுப்பிரார்த்தனைச் சபை தமது பணிகளை மேலும் விருத்தியடையச்செய்ய வேண்டும் என்னும் நோக்கினால் 14.01.1965 ல் "சைவசமய அபிவிருத்திக் கழகம்" என்னும் பெயருடன் மிளிர்வதாயிற்று.

விநாயகப் பெருமான் ஆலயத்தின் வளர்ச்சிக்கு இக்கழகம் உடனிருந்து உதவியது. மேலும் மாணவர்களிடையே சைவசமயக் கல்வியை அளிப்பதற்காக சைவ சமயபாடத்தேர்வு, நீதிநூல் மனனம், திருமுறை மனனம், கோலம் இடுதல், தோரணம் பின்னல், பூமாலை கட்டுதல் ஆகிய போட்டிகளை நடாத்தி சிவராத்திரி தோறும் பரிசுகள் வழங்கப்பட்டன. இம் முயற்சிக்கு சைவப்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சைவத்தமிழ் அறிஞர்கள், முன்னின்று உதவியளித்தனர். 1953 தைப்பூசத் தினத்தில் சைவசமயபாடம், பண்ணிசை, நீதிநூல்கள் கற்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மார்கழி மாத வீதிபஜனை மிகச் சிறப்பாக நடைபெற்றுவருவது பாராட்டற்குரிய தாகும். சிரமதானம், சமூகப்பணிகள் என்பனவற்றிலும் தமது பங்களிப்பினைக் கழகம் செய்துள்ளது. அயலில் வாழ்ந்த பல இளைஞர்களை பண்பாடுள்ள சிவநெறித் தொண்டர்களாக வாழ்வதற்கு வழிவகுத்தது இக்கழகம்.

அமரர் வியாகரணசிரோமணி கி.சீதாராமசாஸ்திரிகள் இக்கழகத்தின் வளர்ச்சிக்குத் தனது ஆலோசனைகளை வழங்கி கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார்.

இவ்வாலயத்தில் நடைபெறும் உற்சவங்கள், விஷேட பூசைகள் ஆகியவற்றுக்கு இக்கழக இளைஞர்கள் சிவநெறித்தொண்டர்களாகப் பணிபுரிந்தனர். 1980ஆம் ஆண்டு வெள்ளி விழாவைச் சிறப்பாக நடாத்தி வெள்ளிவிழாச் சிறப்புமலர் வெளியிடப்பட்டது.

சைவசமய நூல்நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. கூட்டுப்பிரார்த்தனைப் பாடல்கள், சகலகலாவல்லி மாலை, மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரச்சுருக்கம், விநாயகர் அகவல், சிவபுராணம் ஆகிய நூல்களைச் சிறந்த முறையில் இக்கழகம் வெளியிட்டுள்ளது.

இந்துசமயத் திணைக்களத்தினரால் நடாத்தப்பட்ட சமயத் தேர்வுக்கு மாண வர்கள் தோற்றிப் பரிசும், சான்றிதழும் பெற்றுள்ளார்கள்.

சமயக்குரவர், ஆறுமுகநாவலர், சேக்கிழார், கச்சியப்பர் ஆகியோருக்குக் குருபூசை நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்துவதில் கழக உறுப்பினர் தவறியதில்லை.

தொண்டில் ஈடுபட்ட பல இளைஞர்கள் இன்று வெளிநாடுகளில் சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். கழகத்தின் வளர்ச்சிக்குத் தமது பணிகளை இன்றும் செய்து வருகிறார்கள். அன்னார்களுக்கும் கற்பகவிநாயகர் என்றும் அருள்புரிந்துகொண்டே யிருக்கிறார்.

எமது அருட்பணிகளுக்கெல்லாம் நாவலர் மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் தங்கள் பங்களிப்பைச் செய்துவருவது குறிப்பிடக்கூடியதொன்றாகும். வெள்ளிக்கிழமை தோறும் காலையில் இப்பாடசாலை மாணவர்கள் சிவபுராணம் ஓதி வழிபாடு செய்கின்றனர். தேவையான இடத்து ஆலயத்தொண்டிலும் ஈடுபட்டு உதவுகின் றார்கள்.

அறநெறிப் பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றிவரும் செல்வி.ச.இரா ஜேஸ்வரியின் பணியையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

வேண்டியவிடத்து அச்சுவேலைகளைச் செய்து உதவிய தயா அச்சகத்தின ருக்கும் எமது நன்றி.

மேலும் இக்கழகத்தின் ஆயுள் உறுப்பினராகவும் இளமைமுதல் இக்கழகத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிய முன்னாள் பொருளாளர் திரு.ம.கணேசராசா அவர்களுக்கும் இன்று பாராட்டுவிழா எடுப்பதில் இக்கழகம் மேலும் பெருமைய டைகின்றது.

மேலும் கழகத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தோன்றாத்துணை யாக இருந்து இன்னருள் பாலிக்கும் விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை வணங்குகின்றோம்.

இக்கழகத்தின் வளர்ச்சியில் பணியாற்றிவரும் நிர்வாகசபை உறுப்பினர்கள், இளைஞர்கள், அன்பர்கள், நிதியுதவியளித்துவரும் வள்ளல்கள் அனைவருக்கும் நன்றிகூறி அமைகிறோம்.

கழகத்தின் சார்பில்,
**சைவப்புலவர் வ.கந்தசாமி,**
அமைப்பாளர்.

உ
சிவமயம்

வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில்

சைவசமய அபிவிருத்திக்கழகம்

# கடந்தகாலச் செயற்பாட்டறிக்கை

எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் திருவருளால் எமது கழகம் கடந்த ஓராண்டு காலமாக ஆற்றிய பணிகளை அறிக்கையாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். நாம் எடுத்த பணிகள் யாவும் தங்கு தடையின்றி சிறப்பாக நடைபெற்றதென்றால் அது விநாயகப் பெருமானின் திருவருள் என்றே கூறலாம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நோக்கங்களில் சிலவற்றையாவது எமது கழகம் ஆற்றிவருவது யாவரும் அறிந்ததொன்றாகும். இளைஞர்களையும் சிறார்களையும் சமய நெறிப்படுத்த அமைந்ததே எமது கழகம். இன்று 51 ஆவது அகவையில் கால் எடுத்து வைக்கும் பெருமிதத்தில் மிளிர்கின்றோம்.

எமது கழகத்தின்நோக்கம் சைவசமய அறிவை வளர்ச்சியடையச் செய்வதேயாகும். இதனை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் பணிகளைச் செய்துவருகின்றோம்.

* வெள்ளிக்கிழமை தோறும் இவ்வாலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்துதல்.
* சமயகுரவர், ஆறுமுகநாவலர் குருபூசை விழாக்களை நடாத்துதல்.
* ஞாயிறுதோறும் அறநெறிப் பாடசாலை, சமய வகுப்பு, நாம பஜனை நடாத்துதல்.
* பூரணை தோறும் நற்சிந்தனை, விரிவுரை, கருத்தரங்கு நடாத்துதல்.
* ஆண்டுதோறும் சைவசமயப் பரீட்சை, செயல்முறைப் போட்டிகளான கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் போன்ற போட்டிகளை நடாத்தி பரிசில் வழங்குதல்.
* சைவ சமய நூல் நிலையம் நடாத்துதல்.
* ஆலயங்களில் சிரமதானப்பணி புரிதல்.
* மார்கழிமாத திருவெம்பாவை, வீதி பஜனை நடாத்துதல்.
* சாஸ்திர விதிமுறைகளுக்கேற்ப விபூதி தயாரித்து வழங்குதல்.

மேலும் பல பணிகளை ஆற்ற எண்ணியுள்ளோம். அவற்றுக்கு எல்லாம்வல்ல கற்பக விநாயகர் துணைபுரிவாராக.

## அங்கத்தவர்கள்:

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆயுட்கால அங்கத்தவர்கள் | - | 72 |
| சாதாரண அங்கத்தவர்கள் | - | 22 |

## கூட்டுப்பிரார்த்தனை:

வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இதனை ஆரம்பத்தில் சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்களும், பிற்பாடு திரு.சு.செல்வராசா, திரு.ம.கணேசலிங்கம் அவர்களும் தற்போது சைவப் புலவர் வ.கந்தசாமி அவர்களின் தலைமையில் வழிநடாத்திச் செல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

## குருபூசைகள்:

ஒவ்வொரு ஆண்டும் வழமைபோல நாயன்மார்கள் குருபூசை, ஆறுமுகநாவலர் குரு பூசைகள் சிறப்பாகக்கொண்டாடப்பட்டு வருகின்றது. இதில் அறநெறிப் பாடசாலை மாணவர் களின் பேச்சு, பண்ணிசை என்பன நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அறநெறிப்பாடசாலையும் சைவசமய வகுப்புக்களும்:

இவை ஞாயிறு தோறும் காலை 8.30 மணிமுதல் நடைபெற்று வருகின்றது. அறநெறிப் பாடசாலை பாடவிதானத்திற்கு உட்பட்டும் மேலும் நாவலர் சைவ வினாவிடை, பாலபாடம், நீதி நூல், திருமுறைகள் என்பன விஷேடமாகக் கற்பிக்கப்படுகின்றன. இதனைச் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களும், செல்வி ச.இராஜேஸ்வரி அவர்களும் நடாத்தி வருகின்றார்கள்.

## நாம பஜனை:

1995 - 1997 காலப்பகுதியில் பண்ணிசைப் புலவர் வே.சிவஞானம் அவர்களின் தலைமை யில் பிரதி ஞாயிறுதோறும் நடைபெற்று வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## பூரணை விரிவுரை:

1995 - 1997 காலப்பகுதியில் காரை ப்ரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா அவர்கள் "அறிவியல் நோக்கில் ஆன்மீகம்" என்னும் தலைப்பில் பூரணைதோறும் விரிவுரை ஆற்றியது குறிப்பிடத்தக்க தாகும்.

## சமயக்கருத்தரங்கு:

"நாட்டின் இன்றைய காலச் சூழலில் சைவ சமயிகளின் பங்கு" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றை 19.07.1997 அன்று யா/வண்.நாவலர் மகாவித்தியாலயத்தில் நடாத்தினோம். இக்கருத்தரங்கில் பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா "சைவ நிறுவனங்களின் பங்கு" பற்றியும் திரு.இரா.செல்வவடிவேல் "இந்து இளைஞர்களின் பங்கு" பற்றியும், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் "சைவ ஆலயங்களின் பங்கு" பற்றியும் திரு.க.சிவராமலிங்கம் "சைவப் பெருமக்களின் பங்கு" பற்றியும் கருத்துரை வழங்கினார்கள். இதற்கான ஆதரவை வினோ நகைப்பூங்கா நிறுவனத்தினர் வழங்கியிருந்தார்கள்.

## சைவசமய அறிவுப் பரீட்சை:

இப்பரீட்சை ஆரம்பத்தில் இருபத்து நான்கு பேருடன் ஆரம்பிக்கப்பட்டது. பின் திரு.ச.விநாய கரத்தினம் ஆசிரியரின் துணையுடன் யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு பரவல் ஆக்கப்பட்டு சில நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் நடாத்தப்பட்டுவந்தது.

1990களின் பிற்பாடு திரு.சு.சிறிகாந்தன், திரு.சி.சிவகுமாரன், திரு.சி.அகிலன், திரு.செ.சதீஸ்வரன், திரு.வி.தயாபரன், திரு.இரா.செல்வவடிவேல் ஆகியோர்களின் கடும் முயற்சிகளின் பயனாக தனியார் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களை இணைத்து 2000 மாணவர்கள் பரீட்சை எடுக்க வைத்தார்கள். 1998 காலப்பகுதியில் பிரபல சோதிடர் க. சாம்பசிவம் அவர்கள் மூலம் நயினாதீவு பிரதேசத்திலும், 1999 காலப்பகுதியில் திருமதி பா.பாலசிங்கம் (சேவைக்கால ஆலோசகர்) அவர்களின் உதவியுடன் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்திலும் பரவலாக்கியுள்ளோம். தற்போது எமது அறிவிப்புக் கிடைத்தவுடன் பாடசாலைகள் தாமாகவே முன்வந்து விண்ணப்பிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது. தற்போது 20 பரீட்சை நிலையங்களில் 4750 மாணவர்கள் தோற்றக்கூடிய நிலை உருவாகியுள்ளது. பரீட்சைச் செயலர் சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்களின் வினாத்தாள் தயாரிப்பு, விடைத்தாள் திருத்தத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்கள், நிர்வாகத் திறமையுடன் சிறப்பாக நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## செயல்முறைப் போட்டி:

இவ்வாண்டு ஒன்பதாவது (9) முறையாக செயல்முறைப் போட்டிகளான கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் நடைபெற்றுவருகின்றது. இப் போட்டிக்கு 200பேர் தோற்றுகின்றார்கள்.

## நூலக சேவை:

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் சமய நூல்களைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்னும் நோக்கம் காரணமாக 30.06.1963 இல் நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஏறக்குறைய 500 நூல்களைக் கொண்டதாக இது விளங்குகின்றது.

## அறிவகம்:

தற்போது இல. 163, நாவலர் வீதியில் உள்ள கடைக் கட்டடத்தில் 2003 தைப் பூசத்தன்று திறக்கப்பட்டு கழக அலுவலக வேலைகளுக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அறிவகமாக இயங்குவதற்குப் போதிய இடவசதி இன்மையால் இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை.

## மார்கழிமாத திருவெம்பாவை வீதி பஜனை:

மார்கழி மாத திருவெம்பாவை வீதி பஜனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவ்வீதி பஜனைக்கு பெரியோர்கள், சிறுவர்கள், மொத்தம் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. வீதி பஜனையை அனுசரித்து அன்பர்கள் தாகசாந்தி அளித்துவருகின்றார்கள்.

ஆரம்பத்தில் திரு.சு.செல்வராசா அவர்களும் தற்போது திரு.சொ.முகுந்தன், திரு.சி.சிவகுமாரன் ஆகியோர் தலைமையேற்று நடத்திவருகின்றார்கள்.

## நூல் வெளியீடு:

மாணிக்கவாசகர் சரிதம், சகலகலாவல்லி மாலை, திருமுறைத் திரட்டு, இலக்கண வினா விடை ஆகிய நூல்களை வெளியிட அன்பர்கள் உதவியை எதிர்பார்த்து விடுத்த கோரிக்கைக்கு எமது கழக முன்னாள் உறுப்பினரும், ஆயுட்கால அங்கத்தவருமான திரு.பாலசுந்தரம் பாலகுகன் 2000 இலக்கண வினாவிடைப் புத்தகங்களை இலவசமாக அச்சிட்டுத் தந்துள்ளார்.





சமய அறிவுப் போட்டிப் பரீட்சையின் போது மாணவர்கள்



செயல் முறைப் பரீட்சை கோலம் போடுதல்



செயல் முறைப் பரீட்சை மாலை கட்டுதல்



செயல் முறைப் பரீட்சை தோரணம் பின்னுதல்



அறநெறிப் பாடசாலை மாணவர்களுடன் ஆசிரியர்கள்



சிவராத்திரிதின ஸ்நபன அபிஷேகத்தின் போது



மார்கழி திருவாதிரை ஆருத்ரா தரிசனத்தின் போது

# கடந்த 10 வருடங்களில் ஆண்டு விழாவின் போது பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தவர்கள்



கலாநிதி க.குணராசா
பிரதேசசெயலர்



பேராசிரியர் இ.குமாரவடிவேல்
யாழ் பல்கலைக் கழகம்



சிவத்தமிழ்வித்தகர்
சிவமகாலிங்கம்



"சிருகஜோதி" கா.கணேசதாசன்
ஓய்வு பெற்ற அதிபர்,



திரு. அ.சிறீக்குமரன்
அதிபர், யாழ் இந்துக் கல்லூரி



அமரர் திரு.ஐ.துரைராஜா
அதிபர் யா.வண் நாவலர் மகாவித்தியாலயம்



திரு.வே.ஞானகாந்தன்
அதிபர்,யாழ் இந்து ஆரம்ப பாடசாலை



திரு.சி.சோமேஸ்வரபிள்ளை
அதிபர்,யாழ் ஆனைப்பந்தி மெ.மி.வித்



திரு.த.சிவராசா
அதிபர்,யா.வண்.நாவலர் வித்தியாலயம்



அதிபர்



வெள்ளிக் கிழமை
கூட்டுப்பிரார்த்தனையின் போது



பொதுக்கூட்டத்தின் போது



பொதுக்கூட்டத்தின் போது

விபூதி தயாரிப்பின் போது













விபூதி
வெளியீட்டின்
போது












19.07.1997 (பூரணை)

**கருத்தரங்கின் போது**

01. சைவப் புலவர் வ.கந்தசாமி

02. செஞ்சொற்செல்வன் இரா.செல்வவடிவேல்

03. பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர்

04. பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா

இதன் பெறுமதி 40,000/-. அத்துடன் கழகப் பாவனைக்கு தமிழ் தட்டச்சு இயந்திரம் ஒன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளார். இவருக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

## விபூதி வெளியீட்டுவிழா:

சிவ சின்னங்களில் ஒன்றான விபூதியை சாஸ்திர விதிமுறைக்கு ஏற்பவும் ஆகம விதிகளுக்கு அமைவாகவும் தயாரிக்க பேரவாக்கொண்டு நீண்டகாலமாக எடுத்த முயற்சியின் பயனாக சிரமத்தின் மத்தியிலும் எமது கழகம் விபூதியைத் தயாரித்து 17.05.1998 இல் வண்ணை நாவலர் மகா வித்தியாலய மண்டபத்தில் விபூதி வெளியீட்டு விழா ஒன்றை நடாத்தியது. இந்த விழாவிற்கு மெய்யடியார்கள் தந்த ஆதரவு எமது கழகத்தின் ஒரு சிறப்பான காலத்தின் தேவைக்கேற்ற நடவடிக்கை என்பதை எமக்கு உணர்த்தியது எனலாம். இதனுடன் தொடர்ந்து விபூதி அறிமுக விழா ஒன்றை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவுடன் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் 17.07.1998இல் நடாத்தினோம். தொடர்ந்தும் விபூதி தயாரிப்பதில் ஈடுபட்டு வருகின்றோம். இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா அவர்களுக்கு நன்றிகள்.

## அருள்நெறி விழா 1998 இல் முதலிடம்:

யாழ். மாவட்டத்தில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற அருள்நெறி விழா - 98இல் அறநெறி பாடசாலைகளுக்கு இடையிலான ஆன்மீக அறிவு புதிர் போட்டியில் எமது கழக அறநெறிப்பாட சாலை மாணவர்களான செல்வன் சா.ஸ்ரீகோகுலன், செல்வி பொ.அர்ச்சனா ஆகியோர் பங்கு பற்றி முதலிடத்தைப் பெற்றனர். இவர்களுக்கு கழகத்தின் சார்பில் வாழ்த்துக்கள்.

## 2வது உலக இந்து மகாநாடு - 2003:

இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட 2வது உலக இந்து மகாநாடு மே 2 -மே 6 2003 முன்னிட்டு யாழ்.பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள், இந்து அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் 19 அமைப்புக்கள் போட்டியிட்டன. இதில் எமது சைவசமய அபிவிருத்திக் கழகம் **1வது இடம்** பெற்றமை எமது பெருமையை பறைசாற்றியுள்ளது. அத்துடன் அமைவிடம், அதன் செயற்பாடுகளை அதிகாரிகள் பாராட்டியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் இதனை முன்னிட்டு சைவசமய பொது அறிவுப்போட்டி, அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சமய அறிவுப்பரீட்சை என்பன நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இக்கழக வளர்ச்சியில் அயராது உழைத்துவரும் கழக நிர்வாகிகள், அங்கத்த வர்கள், அன்பர்கள், அடியார்கள் யாவருக்கும் எமது நன்றியினைத் தெரிவிக்க வேண்டியது எமது கடமையாகும்.

எமது கழகம் வளர்ச்சியடைவதற்கும் அபிவிருத்தியடைவதற்கும் பல அரிய பணிகளை சிறப்புற நடத்துவதற்கும் எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமான் அருள் புரிவாராக! என வேண்டி அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்.

சுப்பிரமணியம் சிறிகாந்தன்
*கௌரவ செயலாளர்.*

உ
சிவமயம்

வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில்
சைவசமய அபிவிருத்திக்கழகம்

# நிர்வாகசபை - 2004

| | |
|---|---|
| போஷகர்: | நல்லை ஆதீன முதல்வர்<br>ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் |
| தலைவர்: | திரு.இ.விஜயரத்தினம் |
| உபதலைவர்கள்: | திரு.இரா.செல்வவடிவேல்<br>திரு.சி.சோமேஸ்வரபிள்ளை |
| செயலாளர்: | திரு.சு.ஸ்ரீகாந்தன் |
| உப செயலாளர்: | திரு.ச.ஸ்ரீகாந்தன் |
| பொருளாளர்: | திரு.சி.சிவகுமார் |
| சமயப் பிரசாரகர்: | திரு.சொ.முகுந்தன் |
| பரீட்சைச்செயலர்: | சைவப்புலவர் வ.கந்தசாமி |
| நூலகர்: | திரு.வி.ரவிமோகன் |
| பஜனைக்குழு இணைப்பாளர்கள்: | செல்வி ச.இராஜேஸ்வரி<br>திருமதி இ.சிவஞானவதி |
| உறுப்பினர்கள்: | திரு.வி.தயாபரன்<br>திரு.நா.லோகநாதன்<br>திரு.எஸ்.பகீரதன்<br>திரு.செ.சுப்பிரமணியம்<br>திரு.R.V.S.பாலசுப்பிரமணியம்<br>திரு.மு.கணேசராசா<br>திரு.தி.தெய்வேந்திரராசா<br>திரு.பா.கோபிநாத். |

## நிர்வாகசபை



**இடமிருப்பவர்கள்:**

திருR.V.S பாலசுப்பிரமணியம்,
திரு.செ.சுப்பிரமணியம்
திரு.சு.சிறீகாந்தன் (செயலாளர்)
திரு.தி.தெய்வேந்திரம்
திரு.இ.விஜயரத்தினம் (தலைவர்)
திரு.சி.சோமேஸ்வரபிள்ளை (உபதலைவர்)
திரு.இரா.செல்வவடிவேல் (உப தலைவர்)

**நிற்பவர்கள் இடமிருந்துவலம்:**

திருமதி இ.சிவஞானவதி
திரு.பா.கோபி
திரு.சி.சிவகுமாரன் (பொருளாளர்)
திருநா.லோகநாதன்
திரு.இ.ரவிமோகன் (நூலகர்)
செல்வி ச.இராஜேஸ்வரி (அறநெறிப்பாடசாலை ஆசரியை)

உ
சிவமயம்

வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில்

சைவசமய அபிவிருத்திக்கழகம்

# முக்கிய பதவி வகித்தோர்

# 1953 - 2003

**தலைவர்:**

திரு.R.V.S.சுப்பையாசெட்டியார்.
திரு.மு.க.இரத்தினவேலுப்பிள்ளை
திரு.செ.சுப்பிரமணியம்
திரு.வ.கந்தசாமி
திரு.R.V.S.பாலசுப்பிரமணியம்
திரு.லெ.பக்கீர்சாமி
திரு.சு.செல்வராசா
திரு.இ.விஜயரத்தினம்

**செயலாளர்:**

திரு.வ.கந்தசாமி
திரு.ஜெ.மெ.ஜெயபாலன்
திரு.இ.மயூரநாதன்
திரு.தி.உலகநாதன்
திரு.ம.சுப்பிரமணியம்
திரு.பா.பாலகுகன்
திரு.மு.க.இரத்தினவேலுப்பிள்ளை
திரு.இ.இராஜயோகன்
திரு.வெ.லோகநாதன்
திரு.வே.குகனேசன்
திரு.செ.மகாராஜா
திரு.ஏ.செந்திக்குமரன்
திரு.தி.சசிதரன்
திரு.க.பாலேந்திரன்
திரு.க.இராஜேந்திரன்
திரு.சு.சிறிகாந்தன்
திரு.இ.தேவகுமாரன்
திரு.அ.சதீஸ்குமார்
திரு.செ.முகுந்தன்
திரு.சு.சிறிகாந்தன்.

**பொருளாளர்:**

திரு.சு.கந்தசாமி
திரு.சு.செல்வராசா
திரு.வே.குகனேசன்
திரு.ம.கணேசலிங்கம்
திரு.மு.கணேசராசா
திரு.லெ.கெங்காதரன்
திரு.க.நவரத்தினம்
திரு.க.சிறிகாந்தன்
திரு.கு.ஞானேந்திரன்
திரு.சி.சிவகுமாரன்.

**பரீட்சைச் செயலாளர்:**

சைவப்புலவர் வ. கந்தசாமி
*(1953 முதல் இன்றுவரை)*

உ

வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில்

**சைவசமய அபிவிருத்திக் கழகம்**

அதன் ஐம்பது ஆண்டுப் பூர்த்தியாக எடுக்கும்

**பொன்விழா**

நிகழ்வின்போது இதுகாலவரை அதனைத் தொடர்ந்து

பாதுகாத்து வளர்த்து வருகின்ற ஆசிரியப்பெருந்தகை **சைவப்புலவர் வ. கந்தசாமி**

அவர்கள் சேவைநலத்தைப் பாராட்டி



**கொழும்பு சிவத்திருமன்றம் உவந்தளிக்கும்**

# வாழ்த்துப்பா

**மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா**

(தரவு)

செந்தமிழாந் தேன்பிலிற்றிச் சிவத்துவத்தின் மணம்பரப்பிச்
சந்ததமும் வண்ணைநகர்ச் சாந்தையர் மடத்திருந்து
திக்கிடங்க ளங்கெல்லாந் திருவருளைப் பொழிந்துமிக
விக்கினந்தீர் கற்பகத்து விநாயகரே கேட்டருள்க.

மொட்டலர்ந்த மலர்தூவி முப்பொழுதும் நின்னெதிரில்
உட்டதும்பு முவகையுட னோங்காரப் பொருளேயுன்
பொற்பதமே சிரங்கொண்டு போற்றிசெய்து நிற்கின்றோம்
கற்பகவி நாயகரே கனிவுடனே கேட்டருள்க.

(தாழிசை)

நித்தியமாய் நிகழ்கின்ற நிறைவான பூசனையிற்
பத்தர்குழாஞ் சூழநின்று பரவுநெறி கண்டோமால்

திங்கள்தொறும் வருகின்ற திகழ்சதுர்த்தி யானபல
மங்கலமாய் நடந்துவரும் வகையெல்லாம் பார்த்தோமே.

வருடங்கள் தொறுமெடுக்கு மலங்கார விழவினொடு
கருமங்கள் நிறைவேறக் காமிகமே யாற்றுவர்மன்

அரியபெரு விரதத்தோ டநுட்டிக்குங் கந்தசட்டி
உரியதிரு வெம்பாவை ஊர்ப்பஜனை யொடுவருவர்

இத்தனையும் பொறுமையொடு இயக்குகந்த சாமியெனும்
வித்தகனை யெங்கேநீ விருப்புடனே தேர்ந்தெடுத்தாய்

செய்தல்பணி யென்றுனது திருக்கோயி லிருந்தானைச்
சைவபரி பாலனநற் சபைத்தலைவ னாக்கினையே.

(அராகம்)

எறும்பெனச் சுரும்பென எடுத்ததிற் குறியுடன்
உறுந்திறன் முழுவதும் உறுதியொ டியல்பவன்

உடலுள முயிரிவை ஒருங்குட னுழைப்பவன்
மிடலில னெனலவன் மிகுமனத் திடமுளன்

எதுசெய லெனினுமற் றதற்குள மகிழ்வொடும்
அதுவது முடித்தபி னகநிறை வுறுபவன்

பகலென விரவென வெதுவொரு பொழுதினும்
முககர முடையவ வுனதடி நினைபவன்

(தாழிசை)

சிவசமய அபிவிருத்திக் கழகமென வமைவித்துத்
தவநெறியில் நம்மவர்கள் சாருவணம் பலசெய்தான்

அகவைகளோ ரையைந்தீ ரானபெருங் கழகத்தை
மகவுபெறு தாயெனவே மனநிறைவாய் வளர்த்தனனே

செறிந்ததொரு நூலகமுந் தெளிவுபெற வகுப்புகளும்
அறிந்தோராற் கருத்தரங்கு மாயபல வமைத்துள்ளான்

கூட்டுப்பி ரார்த்தனைகள் குரவர்குரு பூசனைகள்
நாட்டுக்கு வேண்டியன நல்லபல செய்தனனால்

சைவந்தா னொளிகொள்ளத் தகுதிபெறப் பரீட்சைகளும்
கைவந்தா ரவர்க்குரிய சான்றிதழும் பெறத்தந்தான்

திருநெறிய செயலாற்றல் தெளிவுள்ள வறிவாற்றல்
ஒருசிறிய வடிவத்துள் ஒடுங்கியுள தெப்படியோ

(அம்போதரங்கம்)

அப்பன் நீ
அறிவன் நீ
குரவன் நீ
குணாளன் நீ
திறலன் நீ
செயலன் நீ
நெறியன் நீ
திதானன் நீ

(தனிச்சொல்)

அஃதான்று

(ஆசிரியச் சுரிதகம்)

பொன்விழாப் பொலிவு போற்றுங் கழகம்
முன்னிய கொள்கைப் பிடிப்பொடு கூட
வேண்டிய படியே விருப்புகள் நிகழ்த்துங்
காண்டகு சிறப்பிற் கந்த சாமி
கருத்தி லாழங் கரும நேர்மை
திருத்த மான செயலி லூக்கம்
கொண்ட வடியரைக் கேட்டதுண்டே
உண்டவர் தன்மை யீங்கிவன் மேலே
எங்கள் பெருமக னென்று மோங்க
வேண்டுவ விநாயக னருளே
ஈண்டுபல் லாண்டு வாழிய வெனவே.

ஆக்கம்
புராணவித்தகர் மு.தியாகராசா
துணைத்தலைவர் - சிவத்திருமன்றம்

$\frac{3}{14}$, 1/1 பின்வத்தை வீதி.
தெகிவளை.
15.02.2004

# வெளிநாட்டு வாழ்த்துச் செய்திகள்



வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் அருளால் வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயர் கோயில், சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பொன்விழா சிறப்புற வாழ்த்துகிறேன்.

**பிரம்ஸ்ரீ தே.புவனேஸ்வரராஜசர்மா (முன்னாள் ஆலய பிரதம குரு)**
**தென் ஆபிரிக்கா**



வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் அருளால் வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயர் கோயில், சைவசமய அபிவிருத்திக் கழகம் தொடர்ந்து 100வது ஆண்டையும் கொண்டாட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**திரு.சு.செல்வராசா (முன்னாள் தலைவர்) கனடா**



பொன் விழாவைக் கொண்டாடும் வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயர் கோயில், சைவசமய அபிவிருத்திக் கழகம் மேலும் பல தொண்டுகளை இறைவனுக்கும் இறை அன்பர்களுக்கும் செய்ய வேண்டும் என வெள்ளி விழா செயலாளர் ஆகிய நான் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.செ.மகாராஜா (முன்னாள் செயலாளர்) லண்டன்.**



50வது ஆண்டு விழா காணும் வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயர் கோயில், சைவசமய அபிவிருத்திக் கழகம் வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் அருளால் இன்னும் பல நற்பணிகளை செய்து பல விழாக்களைக் காண வாழ்த்துகிறேன்.

**திரு.சி.அகிலன் (முன்னாள் உபசெயலாளர்) கனடா.**



வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் அருளால் வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயர் கோயில், சைவசமய அபிவிருத்திக் கழகம் தனது 50 வது ஆண்டு விழாவினைக் கொண்டா டுவதனை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். கழகத்தின் பணிகள் தொடர்ந்தும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல விநாயகப் பெரு மானை வேண்டுகிறென்.

**திரு.தேவராஜன் ஜெயராமன் (முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்)**
**ஆவுஸ்ரேலியா**

# வெளிநாட்டு வாழ்த்துச்செய்திகள்



வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் பொன்விழா நடைபெறவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இக்கழகம் பல பணிகளைப்புரிய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.க.பாலேந்திரன்
முன்னாள் செயலர் (நோர்வே)



சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பொன்விழா சிறப்புடன் நடைபெறவும் எதிர்காலத்தில் கழகம் பல்வேறு பணிகளைச் செய்யவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.ச.இராசேந்திரம்
முன்னாள் செயலர் (பிரான்ஸ்)

# கழக வளர்ச்சியின் பங்காளி திரு.ம.கணேசலிங்கம் அவர்கள்

(மூத்த உறுப்பினரும்.பொருளாளரும்)



வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தில் 1972 ஆம் ஆண்டில் இருந்து 1992 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக 21 வருடங்கள் பொருளாளராக இருந்து கழக வளர்ச்சியில் பெரும் பங்காற்றிச் சாதனை படைத்துள்ளார். இவர் 1992ற்குப் பின் கடும் சுகவீனம் காரணமாக தனது கழகப் பணிகளை இடைநிறுத்தி ஓய்வு எடுத்துக்கொண்டார்.

இவர் கழகத்தினால் நடாத்தப்படும் கூட்டுப்பிரார்த்தனை. திருவெம்பாவை வீதி பஜனை, மற்றும் ஆலயத்தில் நடைபெறும் சகல தொண்டுப்பணிகளிலும் முழுமூச்சாக ஈடுபட்டு வழிநடத்திச்சென்ற பெருமைக்குரியவர்.

இன்று கழகத்தின் மூத்த உறுப்பினராகத் திகழும் எமது கழகத்தின் அமைப்பாளரான சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களுக்கு அடுத்தநிலையில் உள்ள மூத்த உறுப்பினர் திரு.ம.கணேசலிங்கம் அவர்கள் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி ஆலயத்தைத் துப்புரவு செய்தல். திருவிளக்கேற்றல். பொங்கல். திருவுலா, நிதிசேகரிப்பு இன்னும்பல பங்களிப்புக்களினை முன்னின்று நடாத்தி பெருமை சேர்த்த மூத்த கழகத்தவர்.

* * *

# எமது வளர்ச்சிப்பாதையில்........

பொன்விழாக் காணும் எமது கழகம் இன்று பல இளைஞர்களையும் சில முதியவர்களையும் கொண்டதாகும். இதில் எழுபது ஆயுட்கால அங்கத்தவர்களையும் நாற்பது சாதாரண அங்கத்தவர்களையும் உள்ளடக்கியுள்ளது.

நாவலர் பாடசாலையில் கல்விகற்ற, கோவில் அயலிலுள்ள சில சிறுவர்களுடன் 1953 ஆம் ஆண்டு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலைப்பூசைக்கு முன்பதாக கோவிலிலே கூட்டுப்பிரார்த்தனை நடாத்திவந்தவர் சைவப்புலவர் திரு.வல்லிபுரம் கந்த சாமி அவர்கள். அப்போது நாவலர் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவரை எல்லோரும் கந்தசாமி மாஸ்ட்டர் என அன்பாக அழைப்பார்கள். இவர் வெளி மாகாணங் களில் கடமைபுரியும்போது வெள்ளிக்கிழமைகளில் கட்டாயமாக வந்து கூட்டுப்பிரார்த்த னையை நிறைவேற்றிவிட்டு, கோவில் அலுவல்களையும் கவனித்து ஞாயிறு இரவு தபால் தொடர் ஊர்தியில் சென்றுவிடுவார். கூட்டுப்பிரார்த்தனைச் சபையில் இவருக்கு உதவி ஒத்தாசைசெய்து சபையை உயர் நிலைக்கு கொண்டுவந்தவர் திரு.ம.கணேச ராசா என்றால் அது மிகையாகாது.

பிரார்த்தனை ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெறச்செய்து சிறுவர்களுக்கும் வளிபடுவோருக்கும் பிரசாதம் வழங்கி ஊக்குவித்தவர் அமரர் திரு.வே.சுப்பையா செட்டியார் ஆவார்.

மாஸ்டர் அவர்களது முயற்சியால் கூட்டுப்பிரார்த்தனை சபை பஜனைச் சபையாக பரிணாமம்பெற்று, பின் பல வயதில்கூடிய சைவ அங்கத்தவர்களை உள்வாங்கி சைவசமய அபிவிருத்திக் கழகம் உதயமாகியது. இந்தஸ்தாபனத்திற்கு அப்போதைய உப தலைவர் திரு.செ.சுப்பிரமணியம் (கட்டுரையாளர்) அவர்களால் யாப்பு வரையப்பெற்றது. 1988 ஆம் ஆண்டு கழகம் அரசாங்கத்தில் பதிவுசெய்யப் பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரியார், பிரம்மஸ்ரீ கி.சீதாராமசாஸ்திரிகள், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார், வித்வான் ந.சுப்பையாபிள்ளை இன்னும்பலரது அருளாசிபெற்ற இக்கழகம் சாஸ்திரிகள் அவரது அறிவுரைகளைப் பின்பற்றி கிரியைகளை நடைமுறைப்படுத்துகின்றது.

கழக நூல்நிலையம் பிரம்மஸ்ரீ கி.சீதாராமசாஸ்திரி அவர்களால் திறந்துவைக்கப் பட்டது.

கழக அங்கத்தவர் சிலரால் ஒலிபெருக்கிசாதனங்கள், வலுக்கூடிய மின் விளக்குகள், மின் பிறப்பாக்கி முதலிய இன்னும் பல பொருட்கள் அன்பளிப்பாக தரப்பட்டன.

**முன்பு கழகத்தலைவர்களாக இருந்தோர்:**

அமரர் திரு.வை.செல்லையா
அமரர் திரு.வே.சுப்பையா செட்டியார்
அமரர் திரு.மு.க.இரத்தினவேற்பிள்ளை
திரு.வ.கந்தசாமி
திரு.செ.சுப்பிரமணியம்
திரு.லெ.பக்கீர்சாமி
திரு.சு.செல்வராசா
திரு.இ.விஜயரெத்தினம்


இவர்களுள் சைவப்புலவர் திரு.வ.கந்தசாமி அவர்கள் கழகத்தை வழிநடத்தியவர் ஆவார். இவரது சமயப் பணியை மதித்து மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் சிவநெறிச்செம்மல் எனும் பட்டத்தை வழங்கியது. இவரது சேவைகளின் நிமிர்த்தம் பிரம்மஸ்ரீ ஆத்மநாதசர்மா ஞாபகார்த்தசபை சிவநெறிக்காவலன் எனும் பட்டத்தையும், சைவப்புலவர் சங்கம் சைவபூஷணம் எனும் பட்டத்தையும் நல்கி கௌரவித்தது. இதுவரைகாலமும் எமது கழகத்தின் பரீட்சைச் செயலராக இருக்கின்ற திரு.வ.கந்தசாமி அவர்கள் சைவபரிபாலன சபையின் தலைவராகவும், அச்சபையின் பரீட்சைச் செயலாளராகவும் இருப்பது கழகத்திற்கு மகிழ்ச்சியளிக்கின்றது.

கழக அங்கத்தவ இளைஞர்கள் மிகத் துடிப்புடன் செயற்பட்டு கழகத்தை பொருள் வளத்துடன் வைத்திருப்பது மட்டுமல்லாது அறநெறிப் பாடசாலை, நூலகசேவை, சிரமதானப்பணி, சமயச்சொற்பொழிவுகள், சமயபோதனை, சமயப் பரீட்சை, புராணப் படிப்பு, குருபூசைகள், சமயபுஸ்தகங்கள் அச்சிடுதல், முறைப்படி விபூதி தயாரித்தல் முதலிய சமய நற்பணிகளைச் செய்துவருகின்றனர். திருவெம்பா வீதிப் பஜனையை சிறப்புற முன்னின்று நடத்துபவர்களில் மிக முக்கியஸ்தர்களான திரு.சு.செல்வராசா, திரு.சொ.முகுந்தன், திரு.சி.சிவகுமாரன் அவர்கள் பாராட்டுக்குரிய வர்களாவர். இந்த இளைஞர்களுடன் தோளோடுதோள் நின்று உழைக்கின்றவர் அதன் தலைவர் திரு.இ.விஜயரெத்தினம் அவர்கள்.

சைவசமய அபிவிருத்திக் கழகத்தில் செயலாளர்களாக சேவை செய்த சகலரும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த நிலைகளில் இருக்கிறார்களென விநாயகர் அருளை நினைத்தி மகிழ்வடைகிறேன்.

இக்கழகத்தின் சமயப்பணி மென்மேலும் வளர்ச்சியடையவும், அதனால் சைவப் பெருமக்கள் சீரான சமயவாழ்வைப் பெறவும், அதன்மூலம் புதிய தலைமுறைகள் சைவ சமயத்தை விளங்கிக்கொள்ளவும், உள்நாட்டு வெளிநாட்டிலிருக்கும் அங்கத்தவர்கள் வழிகாட்டியாக இருக்கவும் எல்லாம்வல்ல கற்பகவிநாயகரை வேண்டிநிற்கின்றேன்.

**செ. சுப்பிரமணியம், J.P**
தலைவர், தர்மபரிபாலன சபை,
முன்னாள் தலைவர், சை.அ.கழகம்.

# அமரர்களான
# கனகசபை நேசமலர்
# ஞாபகார்த்த
# அன்பளிப்பு

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்,
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
*T.P. 222 2063*

- ஆறுமுகநாவலர் -

நான்காம் பாலபாடம்

# தருமம்

அடிமையானவன், தன்னிடத்தே தன்னாயகன் ஒப்பித்த பொருளை, அவன் கருத்தறிந்து, அக்கருத்தின்படியே, செலவு செய்தல் வேண்டுமன்றோ. அந்நாயகன் கருத்துக்கு மாறாகச் சேமித்து வைத்துக் கொண்டாலும் தன்னிச்சைப்படி செலவு செய்து அழித்தாலும், அதனாலே தண்டிக்கப்படுவானன்றோ. ஆன்மாக்களெல்லாம் சகல லோக நாயகராகிய கடவுளுக்கு மீளாவடிமைகள் தமக்குத் திருத்தொண்டு செய்து பிழைக்கும் பொருட்டு ஆன்மாக்களுக்கு இவ்வருமையாகிய மனித சரீரத்தைக் கொடுத்தருளினவர் அக்கடவுளே. மனிதர்களிடத்துள்ள பொருளெல்லாம் அவர் கொடுத்து அருளிய பொருளே. பொருள் கொடுத்தருளிய கடவுளுடைய திருவுளக் கருத்து யாது? அவர்கள் தங்களுக்கும் பிறருக்கும் சரீர சுகத்தின் பொருட்டும் ஆன்ம சுகத்தின் பொருட்டும் செலவு செய்வதும் ஆன்மசுகத்தின்பொருட்டே என்று தெளிந்து, ஆன்ம சுகத்தையே நாடல் வேண்டும். எல்லோரும் இவ்வுண்மையைத் தெளிய அறிந்து, தமக்குக் கடவுள் அருளிச் செய்த பொருளை அவர் திருவுளக் கருத்தின் படியே செலவு செய்து, சரீர சுகத்தையும் அது நெறியாக ஆன்ம சுகத்தையும் அடைதல் வேண்டும். அப்படிச் செய்யாது கடவுளுடைய திருவுளக் கருத்துக்கு மாறாக வீண்செலவு செய்வோரும், உலோபத்தினாலே சேமித்து வைப்போரும், அக்கடவுளாலே தண்டிக்க படுவர்.

தங்கள் தங்களால் இயன்ற மட்டும் வருந்திப் பொருள் சம்பாதிப்பவர்களுள்ளே சிலர், தாங்கள் உண்ணாதும், உடாதும், தங்கள் பிதாமாதாக்கள் முதலிய பந்துக்களுக்குக் கொடாதும், தருமஞ் செய்யாதும், அப்பொருளைத் தரையிலே புதைத்து வைக்கின்றார்கள். வீட்டுச் சுவரினுள்ளே வைத்துக் கட்டடஞ் செய்கின்றார்கள், இவர்கள் இறந்தபின் இந்தப்பொருளை அநுபவிப்பவர் யாரோ! அறியோம்.

சிலர், புத்திர பாக்கியம் இல்லாதவர்களாய் இருந்தும், தங்கள் பொருளைத் தருமத்திலே சிறுதும் செலவிடாது வைத்துவிட்டு, இறக்கின்றார்கள். அந்தப் பொருளெல்லாம் அவர்கள் பந்துக்களுக்குங் கிடையாது, வீண் வழக்குகளிலே செலவாய் விடுகின்றன.

சிலர் தங்கள் பிதா, மாதா முதலிய பந்துக்கள் பசியினால் வருந்தத் தாங்களும் தங்கள் பெண்டிர் பிள்ளைகளும் உண்டுடுத்துக் களிப்புற்றிருக்கின்றார்கள். எஞ்சிய பொருளெல்லாம் அநியாய வட்டிக்குக் கொடுத்துப் பிறர் குடியைக் கெடுக்கிறார்கள்.

சிலர் தங்களை நம்பிய பெண்டிர் பிள்ளைகளையுங் கைவிட்டு, பொதுப்பெண்களை நம்பி, தங்கள் பொருள் எல்லாம் அவர்கள் பொருட்டே செலவு செய்கின்றார்கள்.

சிலர் தங்கள் தாயத்தாரோடு வழக்குத் தொடுத்து, அவ்வழக்கிலே எல்லாம் செலவிட்டு, அவர்களையும் வறியவர்களாக்கித் தாங்களும் வறியவர்களாகின்றார்கள்.

சிலர் தங்கள் பகைவர்கண் மீது வைரஞ்சாதிக்கத் துணிந்து, பொய் வழக்குத் தொடுத்துப் பொய்ச் சாட்சிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பரிதானங் கொடுத்தலிலே தங்கள் பொருளெல்லாஞ் செலவழிக்கின்றார்கள். பரிதானம் - கைக்கூலி.

சிலர் தாங்கள் உண்ணலும், உடுத்தலும், ஆபரணந் தரித்தலும், வாகனமேறலும், கூத்துப் பார்த்தலும், கீதங்கேட்டலுமே மனிதப் பிறப்பாலாகிய பயனென்று

நினைந்து, எல்லாப் பொருளையும் அவைக ளின் பொருட்டே செலவு செய்கின்றார்கள்.

சிலர் விவாக முதலிய சடங்குக ளிலும் உத்தரக்கிரியைகளிலுமே செலவு செய்து, பெருந்திரளாகிய பொருளையெல் லாம் இரண்டு மூன்று தினத்துள்ளே பாழாக்கு கின்றார்கள். தொழில் செய்து சீவனஞ் செய் யச்சத்தியிருக்கவும் அது செய்யாத சோம் பேறிகளுக்குத் தங்கள் பொருளெல்லாங் கொடுத்துக் கொடுத்து, அவர்கள் செய்யும் வியபிசாரம், மதுபானம், சூது முதலிய பாவங் களுக்குத் தாங்களே காரணராகின்றார்கள்.

இவர்கள் யாவரும், தாங்கள் நெடுங் காலம் வருந்திச் சம்பாதித்த பொருள்களெல் லாவற்றையும், நல்லறிவும் நல்லோரிணக் கமும் இல்லாமையினாலே, இப்படி வீணிலே செலவு செய்து, பின் கடன்பட்டும் செலவு செய்கின்றார்கள். இத்தன்மையாகிய செய் கைகளினாலன்றோ, இந்தத் தேசங்களில் அநேகர் ஆன்மசுகத்தோடு சரீரசுகத்தையும் இழந்து, வறுமையுற்று வருந்துகின்றார்கள்.

பசி, தாகங்கொண்டு தங்கள் வீட்டில் வந்து ஏழைகளுக்கு அன்னப்பாலாயினும் சலமாயினும் கொடாத வன்கண்ணர்களாகிய சிலர் 'பூரி கொடுக்கப்போகின்றோம்' என்று சொல்லி இடமுங் காலமும் வரையறுத்துக் கொடிகட்டித் திரளான ஏழைச்சனங்களை ஒருங்கு கூட்டிச் சேவகர்களை வாயிலிலே நிறுத்தி, இரண்டு மூன்று யாமம் வரையும் அடைத்து வைத்து, ஒரு கையிலே கோலை யும் மற்றொரு கையிலே பணத்தையும் எடுத்துக்கொண்டு போய், முகமலர்ச்சி காட்டாமலும், இன்சொற்களைச் சொல்லாம லும், காலணா அரையணாக்களை வீசி யெறிந்து, மேல்விழுந்தெடுக்கிற ஏழைச்சனங் களைக் கோலினால் அடித்துத் துர்வார்த்தை களினாலே வைது, கழுத்தைப் பிடித்துத் தள்ளுகின்றார்கள்.

தேவாலயத் திருப்பணிக்கும் நித்திய பூசைக்கும் ஒரு பணமாயினுங் கொடுத்தற்கு உடன்படாதவர்கள் சிலர், உற்சவத்திலே நடனம் கீதம் வாணமுதலியவற்றின் பொருட் டுப் பெருந்தொகைப் பொருளைச் செலவழிக் கின்றார்கள். அப்பொழுதும் அபிஷேகத்தின் பொருட்டு ஒரு ஆழாக்குப் பாலாயினுங் கொடார்கள்.

மகிமை பொருந்திய புராதனால யங்கள் பல கிலமாய்க் கிடப்ப அவைகளைப் புதுக்குவித்தற்கும், அவைகளிலே பூசை உற்சவ முதலியவற்றை விதிப்படி நடத்துவித் தற்கும், மனம் பொருந்தாதவர்கள் சிலர், தெருத்தோறும் நூதானலயங்களைக் கட்டுவித்துப் பூசை உற்சவ முதலியவற்றை விதியின்றி நேர்ந்தபடி நடத்துவிக்கின்றார்கள்.

சமீபத்திலே பூசையின்றி இருக்கும் புராதனாலயங்களிலே ஒரு காலப் பூசை யேனும் செய்வித்தற்கு உடன்படாதவர்கள் சிலர், தூரத்திலே பூசை உற்சவ முதலிய வற்றிற்கு முட்டிப்பாடில்லாதவைகளும் எண்ணிறந்த திருவாபரண முதலியவற்றை உடையவைகளுமாய் இருக்குந் தேவாலயங் களுக்குப் பொருளுதவி செய்கின்றார்கள்.

தொழில் செய்து சீவனஞ் செய்யச் சத்தியில்லாதவர்களாகிய குருடர், முடவர், சிறுகுழந்தைகள், வியாதியாளர்கள், வயோ திபர்கள் என்னும் இவர்களுக்கும், ஆபத்துக் காலத்தில் வந்த அதிதிகளுக்கும் கஞ்சியா யினும் காய்ச்சி வார்ப்பியாது, அவர்களைத் துர்வார்த்தைகளினாலே வைதும், கழுத்தைப் பிடித்துத் தள்ளியும், அடித்தும், ஓட்டிவிடும் வன்கண்ணர்கள் சிலர், தொழில் செய்து சீவனஞ்செய்ய வல்லவர்களாயும், சரீரபுஷ்டி யுடையவர்களாகியும் வியபிசாரம் பொய்ச் சான்று சொல்லல், சூது முதலிய பாதகங்க ளிலே காலம் போக்குபவர்களாகியும் உள்ள சோம்பேறிகளுக்கு முகமலர்ச்சி காட்டிக் கும்பிட்டு, இன்சொற் சொல்லி நெய், வடை, பாயசம், தயிர் முதலியவற்றோடு அன்னங் கொடுத்துப் பணமுங்கொடுக்கின்றார்கள்.

சரீரசுகம், ஆன்மசுகம் என்னும் இரண்டுக்கும் ஏதுவாகிய கல்வியிலே மிக்க விருப்பமுள்ள வறிய பிள்ளைகளுக்குக்

கவலையற்றிருந்து கற்கும் பொருட்டு அன்ன வஸ்திரம் உதவுவதற்கு மனம் பொருந்தா தவர்கள் சிலர், கல்வியிற் சிறிதாயினும் பொழுதுபோக்காது வியபிசார முதலியவை செய்து பிரமேகம், கிரந்தி, அரையாப்பு, பகந்தரம் முதலிய நோய்களைப் பெற்றுக் கொண்டு திரியும் பிரமசாரிகளுக்கு விவாகத் தின் பொருட்டுப் பொருளுதவி செய்கின் றார்கள்.

புராதனாலயங்களிலே கும்பாபிஷே கம் செய்விக்கத் தலைப்பட்டும், அதனை விதிப்படி செய்வித்தற்கும், அவர்களிலே இடிந்து திருக்கோபுரம் திருமதில் முதலி யவைகளைப் புதுக்குவித்தற்கும், அவை களிலே அரசு முதலியவைகள் முளைக்கும் பொழுதெல்லாம் அவைகளைக் களைந் தெறிந்துவிட்டுச் சுண்ணாம்பு பூசும் பொருட் டுக் கூலியாளை நியோகித்தற்கும், மனம் பொருந்தாதவர்கள் சிலர், அதிபாதகிகளும் மகாபாதகிகளுமாய்த் திரியும் எண்ணில்லாத சோம்பேறிகளுக்கு அக்கும்பாபிஷேக காலத் திலே அளவிறந்த திரவியங்களைச் செலவிட்டு விலாப்புடைக்க அன்னங் கொடுக்கிறார்கள்.

சிலர், சரீர புஷ்டியையுடைய அள விறந்த சோம்பேறிகளுக்கு மகோற்சவ காலங்களிலே, சத்திரங்களிலே, ஒவ்வொருவ ருக்கு கால்ரூபா, அரை ரூபா, முக்கால் ரூபா, ஒரு ரூபா வீதமாகச் செலவு செய்து அன்னங் கொடுக்கின்றார்களே! ஐயையோ அவர்கள் நெய்யாறு தயிராறு பெருக அவ்வன் னத்தை விலாப்புடைக்கப் புசித்துவிட்டு, தங்களுக் காயினும் பிறருக்காயினும் யாது நன்மை செய்கின்றார்கள்! அநேகர் தெருத் திண்ணை களிலே படுத்துத்தூங்குகின்றார்கள்! அநேகர் தெருத் திண்ணைகளிலே படுத்துத் தூங்குகி றார்கள். அநேகர் தாசி வீடுகளிலும் தெருத் திண்ணைகளிலும் சூதாடுகின்றார்கள். அநே கர் கேட்கத்தகாத சிற்றின்பப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். இச் சோம்பேறி களுடைய செய்கைகள் இவைகளேயாயும், நம்முடைய செல்வர்கள் இச்சோம்பேறிக ளுக்கே அன்னங் கொடுக்கிறவர்களாயும் இருந்தால், இரதம் நிலையில் வாராது சிலகாலம் தெருவில் நிற்றல் ஆச்சரியமா! அடுத்தடுத்து இப்படி நடக்குமாயின், நம்மை யாளும் அரசினர் சில காலத்துள்ளே இர தோற்சவம் நடவா வண்ணம் தடைசெய்வது ஆச்சரியமா!

இச்சோம்பேறிகளுக்கு அன்னங் கொடுக்கிறவர்கள் "இரதத்தை இழுத்துக் கொண்டு போய் நிலையிலே விடுஞ்சனங்க ளுக்கு அன்னங்கொடுப்போம்" என்று பறை யறைவித்தால், பசியினால் வருந்துகின்ற அளவிறந்த ஏழைச்சனங்கள் முகின் முழக்கம் கேட்ட மயிற்கூட்டங்கள் போலப் பெரு மகிழ்ச்சிகொண்டு ஓடிவந்து சேருவார்களே. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு அணா வீதமாகச் செலவு செய்து, இவ்வேழைக ளுக்கு அன்னங் கொடுத்தால், இவர்கள் நொடிப் பொழுதினுள்ளே இரதத்தை இழுத்துக்கொண்டு போய், நிலையில் விட்டு விடுவார்களே.

நம்முடைய சத்திரபதிகள், இப்படிச் செய்ய விருப்பமில்லாதவர்களாயினும் பிறி தொன்று செய்யலாமே. சத்திரவாயிலில் வரும் சோம்பேறிகளுக்கெல்லாம் 'இரதம் நிலையிலே சேர்ந்தாலன்றிச் சத்திரத்தில் அன்னம் கொடோம்' என்று வெளிப்படுத்து வார்களாயின், இச் சோம்பேறிகள் "ஓகோ வந்தது மோசம், புத்தி புத்தி' என்று சொல்லிக்கொண்டு நொடிப்பொழுதிலே இரதத்தை இழுத்து நிலையிலே சேர்த்து விட்டு வந்து, போசனஞ் செய்வார்களே.

நம்முடைய தேசத்தார்களுள் அநேகர் உலோபமின்றித் தருமஞ் செய்யப் புகுந்தும், தாங்கள் நெடுங்காலம் வருந்திச் சம்பாதித்த பொருளெல்லாவற்றையும் மேற் சொல்லியபடியே பாழுக்கிறைத்து, குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வார் போலப் பாவத்தையே தேடிக்கொள்கின்றார்கள். இவர்கள் ஆன்மசுகத்தை விரும்பாது, தற்காலத்திலே மூடர்களாலே சிறிது பொழுது புகழப்படுதலொன்றையே விரும்புகின் றார்கள். இவர்களாலே எண்ணில்லாத

சனங்கள் சோம்பேறிகளாய் மூடர்களாய்ப் பாவிகளாய் எரிவாய் நரகத்துக்கு இரையாகு கின்றார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் நல்லறிவில்லாமையேயாகும். நல்லறிவு கல்வி, கேள்விகளாலன்றி வாராது. ஆதலினா லே, தருமஞ்செய்யப் புகுவோர், தருமங்களை யும் தருமஞ் செய்யுங் கிரமங்களையும் கற்ற றிந்து கொண்டாயினும், கற்றறிந்தவரிடத்திற் கேட்டறிந்து கொண்டாயினும், விதிப்படி செய்யக்கடவார்கள்.

நல்லோரிணக்கமும் நல்லறிவுமுடை யவர்கள், தங்கள் பொருளிலே தங்களுக்கும் தங்கள் பிதாமாதா முதலிய பந்துக்களுக் கும் பெண்டிர் பிள்ளைகளுக்கும் வேண்டும் வரையும் வைத்துக் கொண்டு, மற்றதைத் தங்கள் ஆன்மசுகத்தின் பொருட்டு உத்தம தருமங்களிலே செலவு செய்வார்கள். அப்படிச் செய்பவர்கள் ஆன்ம சுகத்தை மாத்திரமின்றி, தற்காலத்திலும் பிற்காலத்தி லும் அறிவுடையோர் வாய்ப்படும் நிலை யுள்ள புகழையும் அடைவார்கள்.

பொருளினாலே அவசியமாகச் செயற்பாலனவாகிய உத்தம தருமங்களைச் சொல்லுவோம்:

1. பூர்வ காலத்திலே ஈசுராநுக்கிரகம் பெற்ற பெரியோர்களாலே செய்யப்பட்ட தேவாலயங்களுள்ளும் புண்ணிய தீர்த்தங்களுள்ளும் கிலமாயுள்ளவை களை முன்போலச் செய்வித்தல் வேண்டும். அப்படிச் செய்தவர் பெறும் பயன், முன் அவைகளைச் செய்தவர் பெற்றபயனிலும், ஆயிரமடங்கதிகமாம். அத் தேவாலய முதலியவைகளுள்ளே பழுதடைந்த இடங்களைப் பழுதறப் புதுக்குவித்தல் வேண்டும். அப்படிப் புதுக்குவித்தவர் பெறும் பயன், அவர் களை முன் செய்தவர் பெற்ற பயனிலும் நூறுமடங்கதிகமாம்.

2. பெரியோர்கள் தாபித்த தேவாலயங்க ளுள்ளே, பூசை உற்சவ முதலிய நட வாத தேவாலயங்களிலே, ஆகம விதிப் படி வழுவறச் சிரத்தையோடு பூசை உற்சவ முதலியவை செய்வித்தல் வேண்டும்.

3. தேவாலயத்துத் திருமதில் திருக்கோபுர முதலியவைகளிலே அரசு முதலியவை முளைத்து அவைகளுக்குச் சேதஞ் செய்யாவண்ணம்,கூலியாட்களை நியோ கித்து, அவர்கள் காலந்தோறும் பார்வை யிட்டு அவ்வரசு முதலியவற்றைக் களைந் தெறிந்துவிட்டுச் சுண்ணாம்பு பூசிக்கொண்டு வரும்படி செய்தல் வேண்டும்.

4. தரிசனத்தின் பொருட்டுச் சமீபத்திலே தேவாலயம் இல்லாத இடங்களில் மாத் திரம் நூதனமாகத் தேவாலயம் கட்டு வித்து, இயன்ற மட்டும் பூசை முதலிய வைகளை விதிப்படி நடத்துவித்தல் வேண்டும்.

5. கல்வியறிவொழுக்கங்களாலும் ஈசுர பத்தியினாலும் சிறந்து விளங்கும் போத கர்களைக் கொண்டு, தேவாலயங்களி லும், புண்ணிய தீர்த்தக்கரையிலும், மடங்களிலும் சனங்களுக்குச் சமயத் தைப் போதிப்பித்தல் வேண்டும். இதுவே எல்லாத் தருமங்களினும் மிக மேலாகிய தருமம். இத்தருமம் இல்லா விடத்து மற்றைத் தருமங்கள் பயன்படா வாம். கடவுளுடைய குணங்களையும், மகிமைகளையும், அவரை வழிபடும் முறைமையையும், அவ்வழிபாட்டாலே பெறப்படும் பயனையும் அறியாதவர், கடவுளை வழிபட்டு உய்வது எப்படி? அவர்களுக்குத் தேவாலய முதலியவை களினாலே பயன் யாது?

6. வித்தியாசாலைகளைத் தாபித்து, கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்த உபாத்தி யாயர்களை நியோகித்து பிள்ளைக ளுக்குக் கருவி நூல்களையும், லௌகிக நூல்களையும், சமய நூல்களையும் படிப்பித்தல் வேண்டும். கல்வியிலே மிக்க விருப்பமும் இடையறா முயற்சி யுமுள்ள பிள்ளைகளுள்ளே வறிய பிள்ளைகளுக்கு அன்னமும் வஸ்திரமும்

புத்தகமுங் கொடுத்தல் வேண்டும். வருஷந்தோறும் பரீசை்ஷ செய்து, சமர்த்தர்களாகிய பிள்ளைகளுக்குப் பரிசு கொடுத்தல் வேண்டும்.

7. அன்னசாலை இல்லாத இடத்திலே அன்னசாலை தாபித்து, சிரத்தையோடு தலயாத்திரை, தீர்த்த யாத்திரை செய்பவர்களுள்ளும் கடவுளுக்கு இடையறாத திருத்தொண்டு செய்பவர்களுள்ளும் வறியவர்களாய் உள்ளவர்களுக்கும், தொழில் செய்து சீவனஞ் செய்யச் சத்தியில்லாத வர்களாகிய குருடர், முடவர், சிறு குழந்தைகள் வியாதியாளர்கள், வயோதிபர்கள் என்னும் இவர்களுக்கும் அன்னங் கொடுத்தல் வேண்டும். குருடர் முதலானவர்களுக்குச் சரீர சுகத்தின் பொருட்டு அன்னங் கொடுத்ததன் மாத்திரத்தால் அமையாது. அவர்களுக்கு ஆன்ம சுகத்தின் பொருட்டுக் கடவுளுடைய குணமகிமைகளைப் போதிப்பித் தலுஞ்செய்ய வேண்டும்.

8. வைத்தியசாலை இல்லாத ஊரிலே வைத்தியசாலை தாபித்து வைத்திய சாஸ்திரத்திலே அதிசமர்த்தர்களும் இரக்கமுடையவர்களுமாகிய வைத்தியர்களை நியோகித்து, வியாதியாளர்களுக்கு மருந்து செய்வித்தல் வேண்டும்.

9. ஆன்மார்த்த பூசைக்கும் பரார்த்த பூசைக்கும் உபயோகமாகும் பொருட்டு, விதிப்படி திருநந்தனவனம் வைப்பித்துப் பாதுகாத்தல் வேண்டும். திருநந்தனவனத்துள்ள புஷ்பங்களைக் கடவுட் பூசையினன்றிப் பிற கருமங்களிலே உபயோகித்தல் அதிபாதகம்.

10. குளம் இல்லாத ஊரிலே குளந்தோண்டுவித்தல் வேண்டும். தூர்ந்த குளத்திலே தூர் வாருவித்தல் வேண்டும். படித்துறையில்லாத குளத்துக்குப் படித்துறை கட்டுவித்தல் வேண்டும். கடவுட் பூசகர்களுக்கு உபயோகமாகும் பொருட்டுக் குளக்கரையிலே பூசை மண்டபம் கட்டுவித்தல் வேண்டும். ஸ்நானம் சந்தியாவந்தனம் தீர்த்தபானம் முதலியவைகளுக்கு உபயோகமாகுங் குளங்களை சௌசஞ் செய்தல், அழுக்குவஸ்திரந் தோய்த்தல், இருதுவுடைய பெண்கள் ஸ்நானஞ் செய்தல். இலை முதலியவைகள் விழுந்து அழுகுதல் முதலியவைகளாலே அசுசி அடையா வண்ணம் காவலாளர்களை நியோகித்துப் பாதுகாத்தல் வேண்டும்.

11. வழிப்போக்கர்களுக்கு நிழலிடும்படி வழிகளிலே மரங்களை வைப்பித்தல் வேண்டும். வழிகளிலும் குளக்கரைகளிலும் ஆவுரிஞ்சுகல் நாட்டல் வேண்டும். வழிகளிலே வேனிற் காலத்திலே தண்ணீர்ப் பந்தர்கள் வைத்தல்வேண்டும்.

12. அநாதைப் பிள்ளைகளை வளர்த்துக் கல்வி கற்பித்துவிடல் வேண்டும். திக்கற்ற விதவைகளை அன்னவஸ்திரங் கொடுத்துக் காப்பாற்றல் வேண்டும். விவாகமின்றி இருக்குங் கன்னிகைகளைப் பொருள் செலவிட்டு அவ்வவர் வருணத்திலே விவாகஞ் செய்து கொடுத்தல் வேண்டும். அநாதைப் பிணங்களைச் சுடுதல் வேண்டும்.

பொருள் வைத்துக்கொண்டு தங்கள் தங்களால் இயன்ற மட்டும் தருமஞ் செய்யாத உலோபிகளை, நரகத்திலே, இயமதூதர்கள், செக்கிற் போட்டு எள்ளுப்போல அரைப்பார்கள்;அதுவுமன்றி ஆலையிலிட்டுக் கரும்பு போல நருக்குவார்கள்; அதுவுமின்றி நீரிலே கலந்த உப்பு அந்நீரோடு பின்னமின்றி இருத்தல் போல அவர்கள் சரீரத்தை அக்கினியோடு பின்னமற்றிருக்கும்படி அக்கினிச் சுவாலையாகிய நரகத்தின் கண்ணே போடுவார்கள்; அவர்களை அக்கினிமயமாகிய சூலத்தலையில் ஏற்றுவார்கள்; அவர்களுடைய அவயவங்களெல்லாவற்றையும் ஈர்வாளினால் அரிவார்கள்; எலும்புகளை முறிப்பார்கள்; வறுத்த மணலை முகத்திலே போடுவார்கள். கூரிய வாயினையுடைய இரும்பு முனையை அவர்கள் நெஞ்சினுள்ளே இறங்க அடித்துப் புறம்பே பொருந்திய

இருப்பாணி வளையத்திலே சங்கிலியைப் பூட்டி, இரண்டிரும்புத் தூணைநாட்டி, அவர்களின் மேலே உத்திரத்தைப்போட்டு, அவைகளினடுவே நூறு வருஷங் கிடக்கும்படி கட்டித் தூக்கி, காலுங் கையும் இரண்டு புறத்தினும் பறக்கும் வண்ணம் விடுவார்கள். அவர்களுடைய சிரசிலும், நெற்றியிலும், முகத்திலும், வாயிலும், மார்பிலும், கையிலும், காலிலும் அக்கினியிற் காய்ச்சிய இருப்பாணிகளை அறைவார்கள். அவர்களுடைய நாக்கினடுவே துளைத்து, அக்கினியிற் காய்ச்சிய இருப்புச் சங்கிலிகளை மாட்டி, அவைகளிலே அதிபாரமாகிய இருப்புக் குண்டுகள் பலவற்றைக் கட்டித் தூக்குவார்கள். அதன் பின்பு கைகளிலும் இருப்புச் சங்கிலி பூட்டி, நான்கு மடங்கு கனமுள்ள இருப்புக் கட்டிகளைக் கட்டிவிடுவார்கள். அவர்கள் சரீரத்தை எள்ளுப்போல அரிந்தரிந்து அதனைத் தின்னச் சொல்லுவார்கள். அஃதன்றி அக்கினியிற் காய்ச்சிய ஊசியினாலும் அவர்கள் சரீரத்தைக் குடைந்து இரத்தத்தை ஏற்றுக் குடிக்கவும் சொல்லுவார்கள்; அந்தப் புண்வாயிலே அக்கினிச் சுவாலை போன்ற காரநீரையும் இறைத்துச் செம்பினையும் உருக்கி விடுவார்கள்; அதற்குப் பின்பு எண்ணெயினையும் காய்ச்சி விடுவார்கள். அவர்களை ரௌரவம், மகாரௌரவம் முதலிய நரகங்களெல்லாவற்றிலும் வீழ்த்தி வருத்துவார்கள்.

இப்பாவிகள் எண்ணில் காலம் நரகத் துன்பத்தை அநுபவித்த பின்பு, பூமியிலே மலந்தின்பவைகளாகிய நாய், பன்றி, காகம் முதலியவைகளாய் எண்ணில்லாத தரம் பிறந்து உழல்வார்கள். அதன் பின், மனிதப் பிறவிகடோறும் இருமல், ஈழை, சோகை, வெப்பு முதலிய நோய்களினாலும், வறுமையினாலும் வருந்துவார்கள். பெரும் பசியாகிய அக்கினி சுவாலிக்க, ஒரு பிடியன்னமுங் கொடுப்பாரின்றி, கண்டவர்கள் சீச்சி என்று ஓட்ட நாய் போலத்திரிவார்கள். வறுமை கொடிது! நரகினுங் கொடிது! பூமியில் நரகரெனப்படுவோர் வறுமை நோயினாலே பீடிக்கப்படுவோரன்றி மற்றியாவர்! அடுத்தவர்கள் அடிஅடி என்று அடிக்க, பெண்டிர் பிள்ளைகள் கதற, குலை குலைந்து துன்பக் கடலில் மூழ்குவார்கள். இரக்கத்தகாத இடங்களெல்லாம் இரப்பார்கள். இரக்குந் தொழிலே தங்களுக்குத் தொழிலாக,எரிகின்ற பசிக்கனல் வருத்தக் காற்றுப்போலத் திரிந்து, காகம் போலக் கதறிக்கதறிக் கால் கடுத்தோய வருந்தி 'ஐயையோ சிறிதாயினும் பெலமில்லையே, யாவர் நமக்கு அன்னமிடு வார்கள். ஒரு துணையுமில்லையே' என்று அலறி அலறிக் கால்வீங்கி மரிப்பார்கள். இப்படி மரித்தாலும், தருமஞ்செய்யாப் பாவம் விடுமோ, விடாது. பின்வரும் பலமுறை நீசர்களாய்ப் பிறந்து, பார்த்தோரெல்லாம் பிசைஷப் பிசாசு என்று சொல்லும் வண்ணம், சுழன்று திரிந்து வருந்துவார்கள்.

தாங்களே நெடுங்காலம் வருந்தித் தேடிய பொருளைக்கொண்டு தருமஞ் செய்யாத உலோபிகள் படுந்துன்பங்கள் இவைகளேயாயின், 'நாம் தருமஞ்செய்கின்றோம்' என்று சொல்லிப்பொய்வேடங் காட்டி உலகத்தாரை வஞ்சித்து அவர் பொருளைப் பறித்துத் தருமஞ் செய்யாது விடுவோர்களும், தாங்கள் கூறியவாறே தருமஞ் செய்யப்புகுந்தும், அப்பொருளிலே அணுவளவாயினும் அபகரிப்பவர்களும், தங்களைப் பிறர் நம்பி வந்தடுத்துத் தருமஞ் செய்யும் பொருட்டுத் தங்களிடத்து ஒப்பித்த பொருளைத் தருமஞ் செய்யாது அபகரிப்பவர்களும், பிறர் தருமஞ் செய்யும்பொழுது அதனைத் தடுப்பவர்களும், படுந்துன்பங்களை, ஐயையோ! யாவர் சொல்லவல்லவர்?

பொருளுடையவர்கள், உலோபம் இல்லாமலும், வீண்செலவு செய்யாமலும், தங்கள் தங்களால் இயன்ற மட்டும், மேற்கூறிய தருமங்களையும், அவை போலும் முக்கிய தருமங்களையும், கிரமமறிந்து, விதிப்படி சிரத்தையோடு செய்யக்கடவார்கள். செய்வார்களாயின், இம்மையிலே நிலைபெற்ற கீர்த்தியையும், சந்ததி விருத்தியையும் மறுமையிலே பரகதியையும் அடைவார்கள்.

பொருளில்லாதவர்கள், தருமத்தில் விருப்பமுடைய பிறர் தங்களிடத்து அன்

போடு வணங்கித் தந்த பொருளை வாங்கி, அதில் ஓரணுவளவாயினுங் கவராது, தருமங் களை விதிப்படி சிரத்தையோடு செய்துமுடிக் கக்கடவர்கள். பொருளுடையவர்களுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தித் தருமஞ் செய்யும் பொருட்டு அவர்களை ஏவினவர்கள் பரகதியை அடைவார்கள்.

ஆன்மாக்கள் சரீரத்தை விட்டு நீங்கும் பொழுது, அவர்களுக்கு உண்டாகும் அச்சமும் துன்பமுஞ் சொல்லலாகுமா! அப் பொழுது தங்கள் வீட்டையும் தன தானியங்க ளையும் நினைத்து நினைத்து 'இனி இவை களையாவர் அனுபவிப்பவர்! நாம் உடலை விட்டுப் பிரியும்பொழுது இவைகளெல்லாம் நமக்கு அன்னியமாகுமே' என்று எல்லையில் லாத மனத்துயரம் மேலிட, இறப்பார்கள். ஆன்மாக்கள் இறக்கும்பொழுது படுந்துன்பம், பாம்பு தன் வாயினாலே பற்றும் பொழுது தவளை படுந்துன்பத்துக்கு சமமாகும். அப்பொழுது பிதா, மாதா, பெண்டிர், பிள்ளைகள், முதலாயினோர் அவர்களைக் காக்க வல்லர்களோ? இல்லை இல்லை! அவர்கள் எண்ணில்காலம் வருந்தித்தேடிய திரவியங்கள் அவர்கள் போம்பொழுது துணையாகுமோ! இல்லை இல்லை! அப்பொழுது அவர்களுக்கு அழியாத் துணையாய் உடன் செல்வது அவர்கள் செய்த புண்ணியமே!

ஆதலினாலே, யாவரும் பேசக்கூடா வண்ணம் நாக்கை அடக்கி விக்கல் எழுவதற்கு முன்னே, இத்துணைச் சிறப்பின தாகிய புண்ணியத்தை விரைந்து செய்தல் வேண்டும். விக்கல் வந்த பொழுது, புண்ணி யத்தைச் செய்தலேயன்றி, அங்குள்ளார் பிறரை நோக்கி 'நீங்கள் நம்முடைய பொருளைத் தருமத்திலே செலவிடுங்கள்' என்று சொல்லலும் முடியாதே. அவ்விக்கல் தான் இன்னபொழுது வருமென்பதுந் தெரி யாதே. ஆதலினாலே, இறக்கும் பொழுது செய்வோம் என்று நினையாது புண்ணியத்தை நாடோறும் செய்தல் வேண்டும்.

திருவள்ளுவர் குறள்

**"அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்காற் பொன்றாத் துணை "**
**"நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை**
**மேற்சென்று செய்யப் படும். "**

## தேவ அட்ட மங்கலங்கள்

| | | |
|---|---|---|
| 1. கண்ணாடி | 2. இடபம் | 3. தீபம் |
| 4. ஸ்ரீவற்பம் | 5. இரட்டைச்சாமரம் | 6. சங்கு |
| 7. ஸ்வத்திகம் | 8. பூரணகும்பம் | |

## எண்வகை மனங்கள்

| | | |
|---|---|---|
| 1. பிரமம் | 2. தெய்வம் | 3. ஆரிடம் |
| 4. பிரசாபத்தியம் | 5. சாந்தருபம் | 6. ஆசுரம் |
| 7. இராக்கதம் | 8. இகவாசம். | |

- பேராசிரியர் இ.குமாரவடிவேல் -

# கல்வியின் நோக்கம்.

கல்வியின் நோக்கம், ஒழுக்கமும் பண்புமுள்ளவொரு சமுதாயத்தை உருவாக்குவதாக அமைதல்வேண்டும். கல்வியின் பயனாக மாணவர் நல்லொழுக்கம், பெரியாரைப் பேணல், நல்லோர் சகவாசம், சத்தியம், அறம், அன்பு, மனிதநேயம் போன்ற நற்பண்புகளைப் பெற்றுக்கொள்ளவில்லையானால் கற்ற கல்வியினால் எதுவித பயனுமில்லை. நல்லொழுக்கம், நற்பண்பு பற்றிப் போதிப்பதற்கு ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, வாக்குண்டாம், நல்வழி, திருக்குறள் போன்ற நீதி நூல்களைவிடச் சிறந்த நூல்கள் இல்லை.

கடந்த சில வருடங்களாக யாழ். குடாநாட்டில் இளைஞர்களிடையே ஒழுக்கம் மிகவேகமாகக் குன்றி வருவது கவலை தரும் உண்மை. அறுபதுகளுக்கு முன்னர் ஆசிரியர்கள் படித்த, புத்திக்கூர்மையுள்ள பெருமதிப்புக்குரிய சமூகத் தலைவர்களாகப் போற்றப்பட்டார்கள். இளைஞர்களிடையே மிகச்சிறந்த ஒழுக்கத்தைப் பேணுவதில் ஆசிரியர்கள் மிக முக்கியபங்கு வகித்தார்கள். ஒழுக்கம் பேணுவதிலும் செயற்படுத்துவதிலும் பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கு முழுமையான ஆதரவு வழங்கினார்கள். தற்போது கல்வி வியாபாரமாக மாறிக்கொண்டிருப்பதால் மாணவர்கள் ஆசிரியர்களின் செல்வாக்கு வலயத்திற்கு வெளியே இழுத்துச் செல்லப்பட்டுவிட்டனர். மாணவர்கள் கல்வியைப் பணம் கொடுத்து வாங்கும் ஒரு பொருளாகக் கருதும் துரதிஷ்ட நிலை ஏற்பட்டுவிட்டது. அதனால் மாணவரிடத்தும் சமூகத்திலும் ஆசிரியர்களுக்கு இருந்துவந்த கௌரவம் அற்றுப்போய்க் கொண்டிருக்கிறது.

ஆசிரியர்கள் தமது பழைய கௌரவ நிலையையடைய முயற்சிக்க வேண்டும். ஆசிரியர்கள் தான் மாணவர்களை முழுமையானவர்களாக வடிவமைப்பவர்கள் என்பதை மாணவர்களும் சமுதாயமும் உணரக்கூடிய முறையில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் அமையும்போது ஆசிரியர்கள் தமது பழைய கௌரவ நிலையை மீளப்பெறுவார்கள். ஆசிரியர்கள் கற்பித்தல் மூலம் அறிவூட்டுபவர்கள் மட்டுமல்ல அவர்கள் மாணவர்களுக்கு வாழ்ந்து காட்டும் மாதிரிகளாகவும் அமைய வேண்டியவர்கள்.

கடந்த இரு தசாப்தங்களில் உருவாகிய கவலைக்குரிய இன்னுமொரு விடயமென்னவெனில் குழந்தைகள் குழந்தைப் பருவத்தில் அனுபவிக்கவேண்டிய சந்தோசத்தை அவர்களிடமிருந்து பெற்றோர்கள் பறித்தெடுத்துக்கொண்டமையாகும். எங்கள் பிள்ளைகளில் எத்தனை பேருக்கு அயலிலுள்ள ஏனைய குழந்தைகளுடன் விளையாடுவதற்கு நேரம் கிடைக்கிறது? அவர்களைத் தினமும் நாள் முழுவதும் வேலை செய்யுமாறு - படிக்குமாறு - வற்புறுத்துவதன் மூலம் பெற்றோராகிய நாம் அவர்களுடைய அடிப்படை உரிமைகளைப் பறிக்கவில்லையா? எமது குழந்தைகள் சூரிய ஒளியின் சூட்டைக் கண்டறியாத பூக்கள்போல வளரவில்லையா?

சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை, முழு நேரத்தையும் எல்லாத்தரத்திலுள்ள பிள்ளைகளும் பாடசாலைகளில் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில், தமது ஆசிரியர்கள் அல்லது பயிற்றுவிப்பவர்கள் கூறுபவற்றைக் குறிப்பெடுப்பதில் அல்லது அவர்கள் கொடுக்கும் பயிற்சிகளைச் செய்வதில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். ஐந்தாமாண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் அழுத்தம் கொஞ்சநஞ்சமல்ல இது தேவைதானா?

மாதிரி வினா விடைகள் போன்ற பல்வேறு பரீட்சையை நோக்கமாகக் கொண்ட யுக்திகள் மூலம் மாணவர்களைச் சுயமாகச் சிந்திக்க அனுமதிக்காதவாறு இன்று பிள்ளைகளிடையே பாடங்கள் திணிக்கப்படு கின்றன. இது ஒரு ஆரோக்கியமான விடய மல்ல.

இன்று பெற்றோரின் ஒரே நோக்கம் தமது பிள்ளைகளை எவ்விதத்திலும் பரீட்சை களில் திறமைச் சித்தி பெறவைப்பது என்ற அளவில் மட்டுமே உள்ளது. பிள்ளைகள் நல்ல பெறுபேறுகள் பெறப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முழு முயற்சி எடுக்கவேண்டி யவர்களே. அதேவேளை மாணவர்கள் சமூகத்திற்கு உதவாதவர்களாக வளர்வார் களாயின் இப்பெறுபேறுகளைப் பெற மாணவர்களுக்குக் கல்வியூட்டுவதனால் என்ன பயன்? பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தேர்வில் நல்ல பெறுபேறுகள் பெற முயற்சிப்பதுபோல் அவர்கள் ஒழுக்கம், பண்பு, அடக்கம் உடையவர்களாக வளர்வ தையும் உறுதிசெய்து கொள்வது மிகவும் அவசியம்.

எல்லாக் குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகத்தான் பிறக்கிறார்கள். ஆனால் அவர்கள் எவ்வாறானவர்களாக பரிணமிக்கிறார்கள் என்பது அவர்கள் எவ் வாறான சூழலில் வளர்த்தெடுக்கப்படு கிறார்கள் என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. சமூகம், பாடசாலை, வீடு மூன்றும் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் ஒழுக் கத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றன.

பிள்ளையை ஒழுக்கத்திற்குப் பெயர் பெற்ற பாடசாலையொன்றுக்கு அனுப்பிவிட் டோம். பிள்ளையை ஒழுக்கமுள்ளதாக வளர்த்தெடுப்பது பாடசாலை அதிபரினதும் ஆசிரியர்களினதும் கடன் என்று நினைத்து பெற்றோர்கள் தமது பொறுப்புகளிலிருந்து ஒதுங்கிக்கொள்ளக் கூடாது, ஒதுங்க முடியாது. பிள்ளைகளை ஒழுக்கமுள்ள வர்களாக வளர்த்தெடுப்பதில் பெற்றோரின் பங்கு பாடசாலைகளினதும் ஆசிரியர்க ளினதும் பங்குக்கு இரண்டாம் பட்சமான தல்ல. வீட்டில் பெற்றோர்கள் பிள்ளைக ளுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுதல் வேண்டும். பெற்றோர் ஒழுக்கவீனமாக நடந்துகொண்டு பிள்ளைகள் வேறுவிதமாக நடக்கவேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. காலையில் தூக்கத்திலிருந்து விளிப்பது முதல் இரவு தூக்கத்திற்குச் செல்லும் வரை பிள்ளைகள் வீட்டிற் செலவிடும் பொழுதை எவ்வாறு செலவிட வேண்டும், வீட்டிலுள் ளோர்களுடனும் அயலவர்களுடனும் எவ்வாறு பழகுதல் வேண்டும் என்பதை அன்பு அரவணைப்புடன் பழக்கவேண்டிய கடமை பெற்றோருடையது. வீட்டில் மாணவர் தமது பாடங்களைக் கற்றற்குகந்த சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது பெற்றோர் கடன். பிள்ளைகள் தமது பாடங்களைப் படிக்கவேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டு, பெற்றோர்கள் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் சதாவீற்றிருப்பதும், வானொலிப்பெட்டியை இரைய விட்டுக் கொண்டிருப்பதும் பிள்ளைகளின் கவனத் தைத் திசைதிருப்பக்கூடிய முறையில் சண் டையிட்டுக்கொண்டோ குடும்பப் பிரச்சினை களையும் ஊர்ப்பிரச்சி னைகளையும் நாட்டுப் பிரச்சினைகளையும் பற்றி அரட்டையடித்துக் கொண்டிருப்பதோ மாணவரின் கல்வி வளர்ச் சிக்கு உதவ மாட்டாது.

வீட்டிற்கு வெளியே செல்லும்போது, பொது இடங்களிலும், வீதிகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் பிள்ளைகள் எவ் வாறு நடந்துகொள்கிறார்கள். பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்கிறார்களா என்பதை அவதானிக்கவேண்டியது பெற்றோரினது கடமை. "எனது பிள்ளை அவ்வாறு நடக்க மாட்டான் - நடக்கக்கூடியவனல்ல" என்ற நிலைப்பாட்டை எடுப்பது முட்டாள்தன மானது. குழந்தைகள் எல்லாம் நல்ல குழந்தைகளாகவே பிறக்கின்றன. ஆனால் அவர்கள் வளரும் சூழலும் சகவாசமும் அவர்கள் நல்லவர்களாகவா அன்றித் தீயவர் களாகவா வளர்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்கின்றன. இதனைப் பெற்றோர் கருத்திற்கொள்வது நன்மை பயக்கும். பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலைச் சுற்றாடலிலுள்ள சமூகத் தலைவர்கள் அடிக்கடி சந்தித்து பாடசாலைச்

சுற்றாடலில் இளைஞர்களின் நடத்தைகளை ஆய்வுசெய்வது நன்மை தரலாம்.

**"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"** சிறப்பு என்ற ஔவை வாக்கு நாமெல்லோரும் நன்கறிந்தது. ஆனால் கற்றவர்கள் பற்றி ஒரு அடைமொழியை வைத்துத் தான் ஔவையார் பாடியுள்ளார்.

**"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்கு**
**தன் தேசமல்லால் சிறப்பில்லைக் கற்றோர்க்கு**
**சென்ற இடமெல்லாம் சிறப்பு"**

என்பது ஔவை வாக்கு. இங்கு "மாசற" என்றொரு அடைமொழியை ஔவையார் உபயோகிப்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும். கற்பதை ஐயந்திரிபறக் கற்றல் எனச் சாதாரணமாகப் பொருள் கொள்வர். இதைவிட ஆழமான பொருள் இதற்கு உண்டு. மாசறக் கற்றவனிடம் ஒழுக்கமும் பண்பும் கட்டாயம் இருக்கும். செல்வந்தனிடம் அது இருக்கலாம். இல்லாது போகலாம். அதனாற்றான் கல்விக்கு முதலிடமும் செல்வத்திற்கு இரண்டாமிடமும் அளித்து ஔவையார் பாடினார்.

பரீட்சையிற் சித்தியடையும் நோக்கோடு பாடப் புத்தகங்களையும் ஆசிரியர் தரும் குறிப்புகளையும் மட்டும் படிப்பது மாசறக் கற்றல் ஆகாது. வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். வாசிக்கும் பழக்கத்தை சிறுவயதில் ஏற்படுத்திக் கொள்வது சுலபம். பெற்றோர்கள், தமது பிள்ளைகள், நற்குணங்களை மனதில் ஆழமாகப் பதிக்கக்கூடிய நூல்களை வாசிப்பதைச் சிறு வயது முதல் ஊக்குவித்தல் வேண்டும். மாணவர்கள் தம்மை நடமாடும் நூலகங்களாக மாற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். வாசிப்பதை ஒருபோதும் கைவிடக் கூடாது. இதையே ஔவையார்,

**"நூல் பல கல்"**

என அருமையாகக் கூறி வைத்துள்ளார். இன்று வாசிக்கும் பழக்கம் அருகி வருவது கவலைதருகிறது. அதற்கான காரணங்களுள் முதன்மையானது மாணவர்களுக்குத் தமது பாடப் புத்தகங்களையும் பாடக்குறிப்புக்களையும் தவிர்ந்த வேறெதனையும் படிக்க நேரமில்லை என்பதாகும். கல்வி வியாபாரமாக்கப்பட்டதன் மற்றுமொரு தீய விளைவு இது.

வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களிடம் பொது அறிவு இருக்கும். பொது அறிவு வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது. எம்மைச் சுற்றி இவ்வுலகத்தில் என்ன நடைபெறுகிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் அவசியம். இன்று மாணவர்களில் எத்தனை சதவீதத்தினர் பத்திரிகைகளை வாசித்து உலக நடப்புகளைத் தெரிந்து கொள்கின்றனர்? ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் பொது அறிவையும் வாசிக்கும் பழக்கத்தையும் வளர்க்க பாடசாலை நேரசூசிகையில் வாரத்தில் ஒரு பாட வேளையை ஒதுக்குவது நன்மை பயக்குமென நம்புகிறேன்.

சிலருக்கு சில வல்லமைகள் இயற்கையாகவே அமைந்துவிடுகின்றன. சில பிள்ளைகளுக்கு விஞ்ஞான ஆய்வில் நாட்டமிருக்கும். சிலருக்கு தொழில்நுட்பத்தில் நாட்டமிருக்கும். சிலருக்கு சில கலைகளில் விருப்பிருக்கும். சிலருக்கு மொழியாற்றல் இருக்கும். அவரவர்களுக்கு இருக்கும் வல்லமைகளை மாணவர்கள் வளர்த்துக் கொள்ளப் பெற்றோரும் பாடசாலைச் சமூகமும் ஊக்கமளிக்க வேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகள் டாக்டராக அல்லது பொறியியலாளராக வரவேண்டுமென எதிர்பார்த்து பிள்ளைக்கு விருப்பமில்லாத பாடங்களைப் பிரதானமாகக் கற்குமாறு வற்புறுத்துவது நல்லதல்ல. பலனளிக்கப் போவதுமில்லை. மாணவர் ஒவ்வொருவரினதும் வல்லமைக்கும் விருப்புக்கும் ஏற்பவே அவர்கள் பார்க்கப் போகும் தொழில் அமைதல் வேண்டும். அவர்கள் படிக்கும் பிரதான பாடங்களும் அதற்குத்தகத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் மாணவர்களிடம் விடப்பட வேண்டும்.

நாம் எதைச் செய்யினும் அதில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோள் இருந்தாற்றான் மனத்தெளிவு, உற்சாகம், செய்யும் செயலில் விருப்பம், முயற்சிக்

கான விருப்பம் ஆகியன தானாக வரும். எமது செயல் வெற்றியைத் தரும். ஆகவே நாம் செய்யும் செயல்களை அரைகுறையாக வன்றி, முழுமனத்தோடு நிறைவாகச் செய்ய முயற்சித்தல் வேண்டும்.

**"செய்வன திருந்தச் செய் "**

என்பது நினைவில் வைத்திருக்க வேண்டிய வாக்கு.

கல்வியில் உயர ஊக்கம் அவசியம்,

**"ஊக்கமது கைவிடேல் "**

**"ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு "**

**"சோம்பித் திரியேல் "**

போன்ற ஔவை வாக்குகளை மாணவர்கள் மனதிற் பதித்துக்கொள்ளல் வேண்டும்.

கல்வியின் உண்மையான இறுதி நோக்கம் ஒழுக்கமும் பண்பும் என்பது ஏற்கனவே வலியுறுத்தப்பட்டது. கல்வியுடன் ஒழுக்கமும் பண்பும் இருந்தால் மட்டுமே அடக்கம், அருளுடைமை, அவா இன்மை, இனியபேச்சு, இன்னா செய்யாமை, கள் ளாமை. கொல்லாமை, பொய்யாமை போன்ற நற்குணங்கள் அமையும். ஆகவே ஒழுக்கம் பண்பு பற்றி சிறிது விரிவாகச் சிந்திப்பது உபயோகமுள்ளதாக அமையும் எனக் கருதுகின்றேன்.

ஒழுக்கம் மிக முக்கியம். எவ்வளவு உயர் குடிப்பிறந்தாலும் ஒழுக்கம் குறைந்த வன் இழிந்த பிறப்பினன் தான் என்கிறார் வள்ளுவர்.

**"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும் "**

தினமும் பாடசாலைகள் ஆரம்பமா கும் போது நடைபெறும் பிரார்த்தனையைத் தொடர்ந்து ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் போன்ற அறநெறி நூல்களி லுள்ள உபதேசமொன்றைக் கருப்பொருளா கக் கொண்டு ஐந்து பத்து நிமிடங்கள் ஆசிரி யர்களின் வழிகாட்டலின் கீழ் மாணவரொரு வரைப் பேசவைப்பது விரும்பத்தக்கது.

புகைத்தல், மது அருந்துதல் போன்ற கெட்ட பழக்கங்களால் ஏற்படும் விளைவுகள் பற்றி மாணவருக்கு போதிக்கப்படவேண்டும். தெருவில் தேவையில்லாது அலைவது, கெட்ட வார்த்தைகள் பேசுவது, அழுக்காக இருப்பது, படியாதிருப்பது போன்றன ஒழுக்கக் குறைவான செயற்பாடுகள் என்பன உணரவைக்கப்பட வேண்டும்.

ஒழுக்கம் என்பதன் முழுமையான கருத்து என்ன?

சிந்தனையிலே உண்மை இருந்தாற்றான் நாம் நேர்மையாகவும் நீதியாகவும் நன்மை செய்பவர்களாகவும் வாழ முடியும்.

**"நேர்பட ஒழுகு "**

என்பது ஔவை வாக்கு. உண்மை, நீதி, உலக ஒழுக்கம் என்பவற்றிற்கு ஒரு தனிச் சொல்லாக ஔவை நேர் என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்.

ஒழுக்க வாழ்விற்கு அடிப்படை மனதால் உண்மையாக வாழ்தல். மனதில் உண்மை இருந்தால் பேச்சில் உண்மை வரும். சிந்தனையும் பேச்சும் உண்மையாக இருந் தால் செயல்கள் செம்மையானதாக அமை யும். உண்மையான சிந்தனையும் உண்மை யான பேச்சும் செம்மையான செயலும் ஔவையாரால் சீர்மை என அழைக்கப்படு கிறது.

**"சீர்மை மறவேல் "**

என்பது அவர் வாக்கு.

களவு, கோபம், குரோதம், துரோகம், செருக்கு என்பன கீழ்மையான செயற் பாடுகள். அவை தோன்றும்போது, துணியிலிருந்து அழுக்கை அகற்றி விடுதல் போல, மனதிலிருந்து அவற்றை அகற்றி விடுதல் அவசியம்.

**"கீழ்மை அகற்று "**

என்பது ஔவை மொழி.

நல்லொழுக்கம் என்பது நல்ல சிந்தனை, நல்ல பேச்சு, நற்செயல் இவை யாவும் ஒன்று சேர்ந்த குணவியல்பு. சிந்தனை வேறு, பேச்சு வேறு, செயல் வேறாக இருத்தல் கூடாது. ஒழுக்கத்தை வாழ்வில் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதனால் பெரு நன்மை கிடைக்கும்.

ஒழுக்கமும் பண்பும் மனிதருக்குக் கட்டாயமாக இருக்கவேண்டிய குணவியல் புகள். ஒழுக்கமுள்ள இடத்தில் பண்பும்

பண்புள்ள இடத்தில் ஒழுக்கமும் இருக்கும்.

எமக்கு இருக்கவேண்டிய பண்புக ளுள் அடக்கமுடைமை பிரதானமானது. உணவுக்கு உப்பு எவ்வளவு இன்றியமை யாததோ அவ்வாறே வாழ்விற்கு அடக்கம் இன்றியமையாதது.

அடக்கமுடைமை என்பது மனம், வாக்கு (பேச்சு), காயம் (உடம்பு) ஆகிய வற்றால் பிறரிடம் பணிவாக - அகம்பாவம் இன்றி - அடக்கமாக நடந்து கொள்ளும் பண்பாகும். நாம் பேசும் பேச்சு மிக முக்கியமானது. வீட்டிலும் சரி வெளியேயும் சரி எமது பேச்சின் பண்பிலே தான் எமது வாழ்வு, வளம் மகிழ்ச்சி தங்கியுள்ளது.

**"ஞயம்பட உரை "**

என்பது ஔவை மொழி. தயவுசெய்து, நன்றி போன்ற வார்த்தைகள் தாராளமாக உபயோகப்படுத்தப்படல் வேண்டும். வா, போ, இரு என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக வாருங்கள், போய் வாருங்கள், இருங்கள் போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் தானாக வாயில் வரக்கூடியதாக நாவைப் பழக்கிக் கொள்ளவேண்டும். எமக்குக் கீழ்ப்பட்டோரி டத்தும் அமைதியாக அடக்கமாகப் பேசுதல் வேண்டும்.

**'கீழோராயினும் தாழ உரை'**
**'வெட்டெனப் பேசேல்'**
**'சினந்து பேசேல்'**
**'கடிவது மற'**

என்கிறார் ஔவையார்.

ஆசிரியருடன் வெட்டிப் பேசிய மாண வன் உயர்ந்ததில்லை. எவ்வளவு கெட்டிக் காரனாக இருந்தாலும் படிக்கும் போது ஆசிரியர் ஆசிரியர் தான். மாணவன் மாண வன் தான்.

நமது பேச்சில் அடக்கம் இருத்தல் வேண்டும். பாடசாலை அதிபரையோ அல்லது செயலகமொன்றில் அதிகாரி ஒருவரையோ சந்திப்பதற்குச் செல்வதாக வைத்துக்கொள்வோம். அவரது செயற்கூடத் துள் அனுமதியின்றி நுழைந்து அவர் முன்நின்று நீங்கள் வந்த காரியத்தைக் கூறு முற்படுவது பண்பான - அடக்கமான - செய லாகமாட்டாது. கூடத்து வாசலிலே நின்று "மன்னிக்கவும். உள்ளே வரலாமா" எனக் கேட்டுவிட்டு அவரது பதிலுக்காகக் காத்து நிற்றல் தான் பண்பு. அவ்வதிபர் அல்லது அதிகாரி வருமாறு அழைத்த பின்பு உட்பிர வேசிப்பதே பண்பு. காலணியை நிலத்தில் தேய்த்து ஒலியெழுப்பிக் கொண்டு நடத்தல் அடக்கமான பண்பாகமாட்டாது.

கதிரையில் அமருமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டால் நன்றி தெரிவித்து விட்டு, ஒலியெழுப்பாது கதிரையை நகர்த்தி விட்டு அமருதல் வேண்டும். ஒலியெழுப்பக் கூடிய முறையில் கதிரையை இழுத்தல் அடக்கமுடைய செயலாகமாட்டாது. அமர்ந்த பின்னர் உங்களுக்குச் சிறு பிரச்சினை யொன்றிருப்பதாகக் கூறி அதைச் சுருக்கமாக வும் தெளிவாகவும் எடுத்துக் கூறவேண்டும். எடுத்த எடுப்பிலேயே "உங்கள் கையொப்பம் வாங்க வந்துள்ளேன்" எனக்கூறுதல் பண்பா காது. பேசும்போது எம்முடைய கெட்டித் தனங்களைப் பற்றிப் பெரிதாகப் பேசிக் கொண்டிருப்பது பண்பாகாது.

**"வல்லமை பேசேல் "**

என்ற வாக்கை மனதில் வைத்திருக்க வேண்டும்.

நாம் பேசும்போது மிகவும் அவதான மாகப் பேசுதல் வேண்டும். பிழையான தக வல்களை முன்வைத்தல், பயனற்ற பேச்சுப் பேசிக் கேட்போரது காலத்தை வீணடித்தல், தேவைக்கு அதிகமாகப் பேசுதல் என்பவை யும் அடக்கமான செயற்பாடுகள் அல்ல.

**"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொலிழுக்குப் பட்டு "**

என்கிறார் திருவள்ளுவர்.

பணிவாக - அடக்கமாக - நடப்பதனால் எமக்கு இழிவு வந்துவிடாது. அது நமது பெருமையை - உயர்வை - புலப்படுத்தும். காய்த்துப் பழுத்துப் பயனுடைய மரத்தினது கிளைகள் தாழ்ந்து இருக்கும். பொத்தி வெளிவந்த வாழை தலை சாய்த்து நிற்கும். கனி அற்ற கிளைகளும் பொத்தி வராத வாழையும் நிமிர்ந்து நிற்கும். தாழ்ந்த கிளைக்கும் தலை சாய்ந்த வாழைக்கும் தான் பெருமை.

**"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**

**செல்வர்க்கே செல்வந் தகைத்து"**
என்பது வள்ளுவர் வாக்கு.

நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். நேரம் பொன்னானது. இழந்த நேரத்தை மீண்டும் பெறமுடியாது. எமது நேரத்தைப் பாழாக்குவதுடன் மற்றவர்களது நேரத்தையும் பாழாக்குவதாக எமது செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது.

எமது வாழ்வின் மேம்பாட்டிற்காக, எமது செயற்பாடுகள் சீராக நடைபெறுவதற்காக பல ஒழுங்கு விதிமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அறிந்து வைத்திருப்பதும் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதும் அவசியம். அவற்றை மீறி நடத்தல் பண்பற்ற செயல். நாம் எமது செயற்பாடுகளை ஒரு ஒழுங்கு முறையில் அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கு இறைவனே வழிகாட்டியிருக்கிறான்.

இப்பிரபஞ்சமே ஒரு ஒழுங்கு முறையில் தான் இயங்குகிறது. சூரியனைப் பூமி ஒழுங்காக வலம்வருவதால் தான் பருவ காலங்கள் ஒழுங்கு முறையில் ஏற்படுகிறது. புவி தன்னைத்தானே ஒழுங்கு முறையில் சுற்றுவதனால் தான் இரவும் பகலும் ஒழுங்காக ஏற்படுகிறது. சூரியத் தொகுதியின் கோள்கள், அவை சுற்றும் பாதை, அவற்றின் வேகம் யாவுமே ஒரு ஒழுங்கு முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. நட்சத்திரங்களும் அவ்வாறே.

இவ்வாறான ஒழுங்குமுறை இல்லாதிருந்தால் இப்பிரபஞ்சத்திற்கு என்ன நடந்திருக்குமெனக் கற்பனை செய்து பார்க்கவும் முடியாதுள்ளது.

இப்பிரபஞ்சம், குறித்த விதிமுறைகளுக்கமைய ஒரு ஒழுங்கில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பது விஞ்ஞானத்தின் அடிப்படை. சைவசித்தாந்தத்தின் அடிப்படையும் அதுவே.

மனிதனும் தனது செயற்பாடுகள் ஒரு ஒழுங்கு முறையில் அமைந்தால் மட்டுமே எல்லோருடைய வாழ்வும் செழிப்புறும் - ஒருவரால் ஏனையோருக்கு இடைஞ்சல் ஏற்படாதிருக்கும் - என்பதை உணர்ந்து கொண்டதால், குடும்ப வாழ்க்கை முறை முதல் நாட்டின் நிர்வாகம் வரை யாவற்றிலும் ஒழுங்குமுறையைப் பேண விதிகளை ஏற்படுத்திக் கொண்டான். இவற்றுள் ஒன்று வீதி ஒழுங்கு விதிகள்.

வீதி ஒழுங்கு விதிகளை நாம் கடைப்பிடிக்காவிடின் எமக்கும் ஏனையோருக்கும் இடைஞ்சல் ஏற்படுவதுடன் விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புக்கள், அங்க இழப்புக்கள் ஏற்படும்.

வீதி ஒழுங்குபோலவே, சமுதாயத்தில் நாம் எவ்வாறு நடந்துகொள்ளல் வேண்டும், எதிர்பாலாருடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், மக்கள் கூடும் பொது இடங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் உண்டு. சுதந்திரம் என்பது ஏனையோருக்கு இடைஞ்சலாக நடந்துகொள்வதற்கான உரிமம் அல்ல என்பதை மனதில் ஆழமாகப் பதித்துக் கொள்ளவேண்டும்.

ஒரு சமூகம் நாகரிகமடைந்ததா அல்லவா என்பது அவர்கள் எவ்வளவுக்கு ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்கிறார்கள் என்பதனாற்றான் தீர்மானிக்கப்படுகிறது. ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடவாமை ஒழுக்கமற்ற, பண்பற்ற செயற்பாடுகள்.

நாம் எதைப்படித்தாலும் - முறையாகக்கற்றால் - அது கடவுள் வழிபாட்டின் அவசியத்தை உணர்த்தும்.

**"கற்றதனால் ஆயபயன் என்கொல்**
**வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"**

என்பது வள்ளுவர் வாக்கு. கல்வியின் நோக்கம் ஒழுக்கமும் பண்பும் அடக்கமுமாயின், அதன் பயன் கடவுள் வழிபாடு ஆகும்.

சைவசமயிகளாகப் பிறப்பதற்கு நாம் கொடுத்து வைத்தவர்கள். சைவசமயம் ஒரு வாழ்க்கை நெறி. அவ்வாழ்க்கை நெறிக்கு அடிப்படை ஒழுக்கம், பண்பு, கல்வி, கடவுள்

வழிபாடு ஆகியன. கடவுள் வழிபாடு என்பது கோவிலில் போய் இறை சந்நிதி முன் நின்றோ சுவாமிப் படங்களுக்கு முன் நின்றோ விபூதி தரித்துக் கைகூப்பிவிட்டுப் பிச்சைக் காரனைப் போல படிப்புத்தா, காசு தா, காணி தா, வீடு தா, பகையைத் தீர், நோயைத் தீர் என்று இரப்பதல்ல. அன்பாகத் துதித்துப் போற்றுதலே இறை வழிபாடு. இவற்றிற்குத் துணை நிற்பவை சிவனடியார்கள் சரித்திரங் களும் திருமுறைகளுமாகும். திருமுறைக ளைப் பண்ணோடு ஓதப் பயில வேண்டும். சைவ பரிபாலன சபை போன்ற நிறுவனங்கள் நடாத்தும் பண்ணிசை வகுப்புக்களிலும், அறநெறி வகுப்புக்களிலும் மாணவர்கள் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டும். இதனைப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். நாவலர் பெருமானின் சைவ வினாவிடை போன்ற சமய நூல்களும் நீதி நூல்களும் நீதிக்கதைகளைக் கொண்ட புத்தகங்களும் ஒவ்வொரு வீட்டிலும் இருத்தல் அவசியம்.

பாடசாலைகளில் சமயபாடம் போதிக் கப்படுகிறது. ஆனால் இப்போதனைகள் பரீட் சையில் மாணவர் திறமைச் சித்தி பெறுவதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருப்பதையே காண்கிறோம். சமயக்கல்வி பரீட்சைகளில் சித்தியடைவதற்கும் பரிசுகள் சான்றிதழ்கள் பெறுவதற்கும், அச்சான்றிதழ்களின் உதவி யோடு வேலை வாய்ப்பு பெறுவதற்குமான வொரு உபாயமல்ல. சமயக் கல்வி கற்ற வனை மனிதனாகவாழ வைப்பதாக அமைதல் வேண்டும். இல்லையெனில் சமயக் கல்வி யால் எதுவித பயனுமில்லை.

ஆசிரியர்கள் - சிறப்பாக சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் - ஒழுக்க சீலர்களாக விளங்கவேண்டியது மிக அவசியம். போதனையிலும் சாதனையே சிறந்தது. சமயபாடம் படிப்பிப்பவர்கள் சமய அனுட்டா னங்களைத் தாமும் தவறாது சாதனை செய்துகொண்டு படிப்பவர்களையும் சாதனை செய்யத்தூண்டுதல் வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் வழிபாட்டு முறைகள் பற்றியும் நல்லொழுக்கம், நற்பண்புகள் பற்றியும் பிள்ளைகளின் மனதில் ஆழமாகப் பதியும் வண்ணம் போதித்தல் வேண்டும். இவை பாடவிதானத்தில் இருக் கிறதா என்பது முக்கியமல்ல. இன்று சமய பாடம் எந்த ஆசிரியராலும் கற்பிக்கப்படக் கூடியதொன்று என்ற கருத்து பாடசாலைக ளில் நிலவுகிறது. சில பாடசாலைகளில் பிற மதத்தினர் கூடச் சைவசமய பாடம் கற்பிப்ப தாகக் கூறப்படுகிறது. சமய தத்துவங்கள் பற்றிய விளக்கம் அற்ற, சமய சாதனையிலீடு படாத, ஒழுக்கமற்ற சமய நம்பிக்கையற்ற ஆசிரியர்களைக் கொண்டு சமயம் கற்பிப் பதைவிட சமயம் கற்பிக்கப்படாமல் விடுவது மேல்.

ஆலய வழிபாடு சமய உணர்வு ஏற்படுவதற்கான முதற்படி. ஆலய வழிபாடு என்பது, அங்கு சென்று அருச்சனைக்குப் பூசகரிடம் ஒழுங்கு செய்துவிட்டு, அவர் அர்ச்சிக்கும்போது வேறு பராக்குகள் பார்த்து விட்டு, பின்னர் விபூதிப் பிரசாதம் வாங்கி அணிந்துகொண்டு வீடு திரும்புவது அல்ல. பூசகர் அர்ச்சிக்கும்போது நாமும் இறை நாமத்தை ஓதி வழிபடல் வேண்டும். ஓரிடத்தில் அமைதியாக இருந்து திருமுறை ஓதித் தியானம் செய்தல் வேண்டும்.

கோவில் விழாக்கள் பெரும் தத்து வங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றை விளையாட்டுக்குரிய நிகழ்வாக்கக் கூடாது. கோவில் விழாக்களின்போது வீதிகளில் கூடி நின்று அரட்டையடித்தல், வீண்வார்த்தை பேசுதல், வழிபட வருவோ ருக்கு இடைஞ்சலாக நடந்துகொள்ளல், பிரசாதத்தை வீதிகளில் நின்று கொண்டு கொட்டிச் சிந்தி உட்கொள்ளல், தேங்காய் உடைத்தலையும் தீர்த்தமாடுதலையும் வேடிக்கை விளையாட்டாக்குதல் போன்ற செயற்பாடுகள் கற்றவர்கள் செய்யக்கூடிய ஒழுக்கமுடைய, பண்பாடுள்ள நாகரிகமான செயல்கள் அல்ல. இவ்வாறு நடந்து கொள்பவர்கள் பெருமைப்பட எதுவுமில்லை. இவை பற்றி சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண் டும். பெற்றோர்கள் இவைபற்றி வீடுகளில் பிள்ளைகளுடன் கூடியிருந்து அன்னியோன்னி யமும் அரவணைப்பும் மிக்க சூழ்நிலையில்,

கலந்துரையாடினால் நல்ல பலன் கிடைக்கும். கண்டிப்பதாலோ ஆணையிடுவதாலோ சாதிக்க முடியாதவற்றை சிறுவயதிலே அரவணைப்புடன் கூடிய கலந்துரையாடலால் சாதிக்கமுடியும். இது பிள்ளை குழப்படிகாரனாக வந்த பின்பு செய்யக்கூடிய காரியமுமல்ல என்பதைப் பெற்றோர்கள் கவனத்திற் கொள்வது நல்லது. இது தொட்டிலிலேயே தொடங்க வேண்டிய விடயம். தொட்டிலில் பழக்கம் சுடுகாடு மட்டும். ஒழுக்கமும் பண்பும் அறிவும் நிறைந்தவனே உத்தமன். உத்தமர்கள் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமுதாயத் தலைவர்கள் முழுமுச்சுடன் செயற்பட வேண்டியது இன்றைய அவசரத் தேவைகளுள் ஒன்று.

# அபிஷேகப் பலன்

| | |
|---|---|
| 1. வாசனைத்தைலம் | சுகமளிக்கும் |
| 2. மாப்பொடி | கடனைத் தீர்க்கும் |
| 3. நெல்லிமுள்ளி | அரசன்வசம் |
| 4. மஞ்சள்பொடி | ரோகத்தைப்போக்கும் |
| 5. பஞ்சாமிர்தம் | புஷ்டி அளிக்கும் |
| 6. பசுவின் நெய் | மோஷமளிக்கும் |
| 7. பசுவின் பால் | ஆயுளைக் கொடுக்கும் |
| 8. பசுவின் தயிர் | பிரஜாவிருத்தி உண்டாகும் |
| 9. தேன் | சுகமளிக்கும் |
| 10. கரும்பின்சாறு | ஆரோக்கியமளிக்கும் |
| 11. சர்க்கரை, பழவர்க்கம், வாழைப்பழம் | பயிரை வளர்க்கும் |
| 12. மாம்பழம் | வச்யம் |
| 13. மாதுளை | கோபத்தைப் போக்கும் |
| 14. பலாப்பழம் | புஷ்டியளிக்கும் |
| 15. எலுமிச்சம்பழம் | நேர்மை |
| 16. இளநீர் | போகமளிக்கும் |
| 17. அன்னாபிஷேகம் | சாம்ராஜ்யமளிக்கும் |
| 18. சந்தனம் | லஷ்மியைக் கொடுக்கும் |
| 19. கும்பம் | மோஷப்ரதம் |

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் தின நியமம்

## இராத்திரி

3 மணி முதல் 4 மணி வரை சிவத்தியானமுஞ் சிவ மூல மந்திர செபமுந் தோத்திரமுஞ் செய்க.

4 மணி முதல் 5 மணிவரை திருவள்ளுவர் பரிமேலழகருரையும் திருக்கோவையாருரையும் படிக்க.

5 மணி முதல் 6 மணி வரை தந்ததாவனமும் அநுட்டானமுஞ் சிவாலயப் பிரதக்ஷிணமுஞ் செய்க.

## பகல்

6 மணி முதல் 8 மணி வரை Proof பரிசோதிக்க.
8 மணி முதல் 10 மணி வரை சிவபூசை செய்து போசனம் பண்ணுக.
10 மணி முதல் 12 மணி வரை சைவசித்தாந்தம் படிக்க.
12 மணி முதல் 2 மணி வரை புத்தக பரிசோதனஞ் செய்க.
2 மணி முதல் 4 மணி வரை உரை செய்க.
4 மணி முதல் 5½ மணி வரை சம்ஸ்கிருதம் படிக்க.
5½ மணி முதல் 6 மணி வரை உலாவுக.

## இராத்திரி

6 மணிமுதல் 6½ மணிவரை அநுட்டானம் பண்ணிச் சிவாலய தரிசனஞ் செய்க.
6½ மணி முதல் 9 மணி வரை புத்தக பரிசோதனஞ் செய்க.
9 மணி முதல் 10 மணி வரை புராணவசனமெழுதுக.
10 மணி முதல் 3 மணிவரை நித்திரை செய்க.

அமாவாசை பௌர்ணிமைகளிலும் பிரதமைகளிலும் சைவசித்தாந்த முதலியவை படித்தலொழித்து அவற்றிற்குரிய நேரத்திலே மற்றைய நூல்கள் வாசிக்க.

சிவாலய பிரதக்ஷிணம் செய்யும்போது திருவாசக மனனம் பண்ணுக.

உலாவும்போது சித்தியார் சிவஞானபோதமூல மனனம் பண்ணுக.

ஜன்ம நக்ஷத்திரந்தோறும் விசேஷ பூசை செய்து அட்டோத்திர சத நாமார்ச்சனை பண்ணுக. மாகேசுர பூசை செய்க. சுப்பிரமணிய சுவாமிக்குச் சகச்சிரநாமார்ச்சனை செய்விக்க.

பிரதோஷந்தோறும் தேவார தோத்திரத்தோடு சிவ தரிசனம் செய்க.

கார்த்திகை நக்ஷத்திரந்தோறும் கந்தரலங்கார தோத்திரத்தோடு சுப்பிரமணிய சுவாமி தரிசனஞ் செய்க.

கார்த்திகைச் சோமவாரந்தோறும் சிவசந்நிதியில் நெய் விளக்கிடுக.

சமயகுரவர் நால்வர்க்கும் சேக்கிழார் நாயனார்க்கும் சந்தானகுரவர் நால்வர்க்கும் திருவள்ளுவ நாயனார்க்கும் குருபூசை செய்க.

வருஷந்தோறும் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், உபதேச காண்டம், கோயிற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், காசி காண்டம் இவைகளை நியம மாகப் படிக்க.

நாடோறும் காலையிற் சீரக கஷாயமேனும் நன்னாரிக் கஷாயமேனும் உட்கொள்க. அல்லது சீந்தின்மாவேனும் சிவ கரந்தைச் சூரணமேனும் பொற்றலைக் கையாந்தகரைச் சூரண மேனும் வல்லாரைச் சூரணமேனும் உட்கொள்க.

வாரத்துக்கு இரண்டுதரம் தைலாப்பியங்க ஸ்நானஞ் செய்க. கண்ணுக்கு வெண்மிள கிட்ட எண்ணெயிடுக. உள்ளங்கால்களில் வெண்ணெய் தேய்ப்பித்துக்கொள்க.

மாதந்தோறும் முதற்பானுவாரத்திலே பேதி மருந்து உட்கொள்க. முதன்மாசத்துக் கணக்கெல்லாம் முடித்துக்கொள்க.

பக்ஷந்தோறும் பஞ்சகற்பந் தேய்த்துக்கொள்க.

நாடோறும் பொற்றலைக்கையாந்தகரை நெய்கொண்டு கண்டசுத்தி செய்துகொள்க.

- சித்தாந்தம்

- நன்றி

- சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் -

# விவாகவியல்

விவாவகமாவது அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கு பயன்களையும் பெறுதற்காக ஒரு வாழ்க்கைத் துணையைப் பெறுதல். இது பலவகைப்படும். சைவ நூலிலே விதிக்கப் பட்ட விவாக முறையாவது பெண்ணை அவளுடைய தகப்பன் முதலிய ஒருவர் நாயகனுக்குக் கொடுக்கும் வகையே. விவாகத்திலே வழக்கமான முற்கிரியைகளுக் குப் பின் நடைபெறுவன: பிதுர்த்தேவரது ஆசிர்வாதத்தைப் பெறுதல், தாலிகட்டுதல், ஓமம், நவக்கிரக தானம், ஏழடி நடத்தல், அம்மி மிதித்தல், அக்கினியை வலம்வருதல், நாலாம் நாளில் எண்ணெய் தேய்த்து முழுகுதல், அருந்ததியைக் காட்டுதல், பெரி யோரது ஆசிர்வாதம் என்பவைகளாம்.

**முற்கிரியைகள்** - மணமகன் விவாகம் செய்தற்கும் ஆசாரியர் அதை நடத்துவ தற்கும், சங்கற்பம் செய்தபின், பிள்ளையார் பூசை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தன பூசையா கிய இவை நடைபெறும்: மணமகனுக்கு இரட் சாபந்தனமான பிறகு ஆசாரியர் முறைப்படி சிவகும்பத்துக்கும் தேவி கும்பத்துக்கும் பூசை செய்வார். நவக்கிரககுற்றம் போதற்கா கவும் பூசை செய்யப்படும். அதன்பின் ஓமத்துக்காக அக்கினியுண்டாக்கப்படும். யாகேசுவரர் யாகேசுவரியைக் கும்பத்திலே பூசித்து அதன்பின்னர் அக்கினிகாரியஞ் செய்தல் வேண்டும்.

**பிதுர் ஆசீர்வாதம்** - குடும்பவாழ் வைத் தொடங்கும்போது அது தவறின்றி நடத்தற்கு அக்குடும்பத்து முன்னோரது ஆசீர்வாதம் வேண்டும். இவர்களுட் சிறந்த வர்களாகிய பிதுர்களை மகிழ்வித்தற்கு ஒரு வகையான சிரார்த்தம் மண மகனுடைய தந்தையாலும் மணமகளுடைய தந்தையா லுஞ் செய்யப்படும். இதில் பூணூல் வலமாகத் தரித்தல் வேண்டும். தர்ப்பை கிழக்கு முகமாக வைத்தல் வேண்டும். அறுகும் நெல்லுமன்றி, எள்ளும் அப்பிரதட்சணமுந் தகாதவை. மற்றையவை வழக்கமான சிராத் தம் போல நடைபெறும். இது பிதுர்களை விவாகத்துக்கழைக்கும் பான்மையுமாம்.

**மணமகனுக்கு உபசாரம்** - மண மகளையழைத்து மணமகனுக்கு வலப்பக் கத்திலிருத்தி இரட்சாபந்தனஞ் செய்த பின்பு, அவளுடைய தந்தையார், (தகப்பன் இல்லை யாயின் தமையன், அல்லது தாயாரின் சகோதரன் முதலியோர்) கன்னிகாதானத்திற் காகச் சங்கற்பஞ் செய்வர். பின்பு மணமகனு டைய கால்கழுவி வஸ்திரம் சுகந்தம் கொடுத் தல் முதலிய உபசாரங்களைச் செய்வர்.

**கன்னிகா தானம்** - மணமகளுடைய தந்தையார் கிழக்கு முகமாகவிருந்து மணமக ளைக் கிழக்குமுகமாக வைத்து இரண்டு கோத்திரப் பேர்களுஞ் சொல்லி மங்கலப் பொருள்களோடு அவளுடைய கையை மணமகனுடைய கையிற் கொடுத்துக் கையிலே தண்ணீர் விடுவர். மணமகன் மணமகளுடைய கையிற் பிடித்து அவளை ஏற்பர்.

**தாலி கட்டுதல்** - தாலியிலே சிவலிங்கம் விநாயகர் அல்லது லட்சுமியினு டைய திருவுருவஞ் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தாலியையுங் கயிற்றையுஞ் சுத்தி செய்து அதிலே மூர்த்தியைப் பூசித்த பின்பு. அக்கினியினாற் சுத்திசெய்தற்குச் சம்பாத ஓமம் செய்தல் வேண்டும், மணமகன் தாலியையும் சீலை முதலியவற்றையும் பெரி யோர்களைக் கொண்டு தொடுவித்து ஆசீர்வ திப்பித்தபின் சீலை முதலியவற்றை மணமக ளுக்குக் கொடுப்பார். முகூர்த்தக் குற்றங்க ளைத் தீர்த்ததற்காக ஒரு தானஞ் செய்யப் படும். பின்பு மணமகன் உமாமகேச

மந்திரத்தினால் தாலியைக்கட்டி அந்த மந்திரத்தினால் முடிச்சிலே திருநீறு சாத்திப் பெண்ணுக்குந் திருநீறு சாத்துவார். மணமகள் மணமகனுக்கு இடப்பக்கத்தில் இருத்தப்படுவள்.

**ஆக்கினி பூசை** - மணமகன் அக்கினியிலே மூலமந்திரத்தினால் நூறு ஆகுதி செய்க. பின்பு மதுபர்க்கம்[2] புசித்த பின் சிவ காயத்திரியால் பூதமோதனம்[3] பார்த்து ஆசமனஞ்செய்து நூறு ஆகுதிசெய்க. இருதய மந்திரத்தாற் பசுவையுங் கன்றையுந்[4] தரிசித்து மூலமந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதி செய்க.

**ஏழடி வைத்தல்** - கிரகதோஷம் நீங்குதற்காக நவக்கிரக தானஞ் செய்தபின்பு மணமகளினுடைய கையைப்[5] பிடித்துக் கொண்டு மணமகன் அக்கினிக்குப் பக்கத்தில் ஏழடி நடப்பான். இந்த ஏழடியும் இல்வாழ்க்கையிற் பெறவேண்டிய ஏழு பொருள்களைக் குறிக்கும். இவைகளைப் பெறுதற்கு இருவரும் ஒத்து முயற்சி செய்வதற்கு வேண்டிய அருளைக் கடவுளிடத்தும் பெறுதற்காக இது செய்யப்படும்.

**ஏழு பொருள்களாவன:** உணவுப் பொருள், சரீரபெலம், கடவுள் வழிபாடு, மன அமைவு, அறிவு, காலத்துக்குக் காலம் வரும்பொருள்களும் அவற்றால் உண்டாகுஞ் சுகங்களும், யாகத்துக்கு வேண்டிய துணைகளுமாம். இதிலே சொல்லும் மந்திரத்தினாலும் கிரியையினாலும் மணமகள் மணமகனுடைய கோத்திரத்தைச் சேர்ந்து ஐக்கியமடைகிறாள்.

**கல் (அம்மி) மிதித்தல்** - ஒரு கல்லை அசையமாட்டாத விதமாக வைத்து அதற்குப் பூசித்துப் பெண்ணின் வலது காலை மணமகன் கையாற் பிடித்துச் சிவ காயத்திரி மந்திரஞ்சொல்லிக் கல்லுக்குமேலே தூக்கி வைக்கவேண்டும்.

**அம்மி மிதித்தலின் நோக்கம்** பெண்ணானவள் அந்தக் கல்லைப்போலத் தன்னுடைய நிலையில் நின்றும் பிரியாமலும் இளகாமலுமிருந்து, தனது கணவனிலேயுள்ள பற்று நீங்காமலும் கற்பு நெறியின்றும் விலகாமலும் நிலைப்படுத்தலாம்.[6]

**அக்கினியை வலம் வருதல்** - அக்கினியைச் சுற்றி வந்து அதிலே பொரியிட்டுப் பின்னும் இருமுறை அம்மி மிதித்தல் முதலியன செய்யப்படும். குற்றங்கள் தீர்த்தற்காகப் பிராயச்சித்த ஓமமும் கிரியையின் நிறைவேற்றத்திற்காகப் பூரணாகுதியுஞ் செய்க. இரண்டாம் நாளும் மூன்றாம் நாளும் காலையும் மாலையும் அக்கினி காரியஞ்செய்க. நான்காம் நாள் இருவரும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம்செய்து இரவில் அக்கினி காரியஞ் செய்க. மணமகன் அருந்ததி மந்திரஞ்சொல்லி அருந்ததியைக் காட்டிக் கற்புநிலையை விளக்கவேண்டும். பின்பு பூரணாகுதி செய்க. பிராமணர் ஆசிர்வதித்த பின் பெரியோர்கள் அறுகு அரிசியுமிட்டு ஆசிர்வதிப்பர்.[7] அதன்பின் இரட்சா பந்தனம் நீக்கப்படும்.

(அரசாணி - இது பத்ததியிற் கூறப்படவில்லை. இது தேசவழக்கம் போலும், அரசிலே சிவபிரானையும் வேம்பிலே உமாதேவியாரையும் வழிபடும் வழக்கம் இன்றும் உண்டு. ஒரே இடத்தில் அரசும் வேம்பும் நட்டுப் பூசிப்பதுமுண்டு. ஆதலால் அரசு சிவனைக் குறித்தல் பெறப்படும். ஆல் விஷ்ணுவைக் குறிப்பதென்பர். அரசும் ஆலும் சிவனையும் சத்தியாகிய விஷ்ணுவை யும் பூசித்தற்காக நடப்பட்டு அரசால் என்ற பேருண்டாகி, அரசாணி என்று மாறியிருக்கலாம். இப்போது இவைகளுக்குப் பதிலாக முருக்கு நடப்படுகிறது. முருக்கு அரசு போலவே சிவவழிபாட்டிற்குரிய மரமென்பர். அரசு, ஆல்,முருக்கு ஆகிய மூன்றும் பிரமா, விஷ்ணு, உருத்திரனாகிய மும்மூர்த்திகளையும் பூசித்தற்குரிய மரங்களென்றும் இவை மூன்றையும் நடும் வழக்கமுமுள்ளதென்றுங் கூறுவர். இதன் முடிவு தெரியவில்லை)

மணமகன், மணமகளாகிய இருவருடைய சம்மதமும் அறிந்தே விவாகத்தை நிச்சயித்தல் முறையாம். கயரோகம், குஷ்டம்

முதலிய நோய்களுடையவர் விவாகஞ் செய் யலாகாது. பெண் பதினாறு வயதிலும் [8] ஆண் இருபத்தைந்து வயதிலும் விவாகஞ் செய்தல் தகும். விவாகமானபின், பெண்ணை அன்பா கவும் மரியாதையாகவும் நடத்தல் வேண்டும். "தந்தை, கணவன், உடன்பிறந்தார், மைத் துனர் ஆகிய இவர்கள் பெண்களை உபசரித் துச் சந்தோஷப்படுத்த வேண்டும். எந்த வீட்டிற் பெண்கள் சந்தோஷத்தை அடைகி றார்களோ அங்கே எல்லா நன்மைகளு முண்டாகும்." (மநு 9 - 55,56) ஆயினும் எந்தக் கூட்டத்திலும் தலைவர் ஒருவரில்லை யாயின் ஒழுங்கு வராதாதலால், குடும்பத்துக் கும் தலைவர் ஒருவர் வேண்டும். அவர் மணமகனே. ஆதலாற் பெண் கணவனுக் கமைந்து நடப்பது கடனாகும். இது பதிவிர தாதர்மம் எனப்படும். இதனாலே பெண்கள் அருமையான பெரும் வல்லமைகளைப் பெறு வர். பதிவிரதையாகிய காந்தாரியினுடைய பார்வையினாலே துரியோதனனுடைய சரீரம் வச்சிரமானதைக் காண்க.[9] இதிற் பெரியபேறு வேறில்லை. வீட்டு முயற்சிகளைச் செய்து இல்லறங்களை நடத்தத் துணைசெய்வதே பெண்ணுடைய கடனாதலால் அவளுக்கு இல்லாளென்றும், மனையாளென்றும் பெயர் வந்தன. ஆடவனுக்குப் போலவே பெண் ணுக்கும் முயற்சி குறைவற இருத்தல் வேண்டும்.

---

1. கையிலே தண்ணீர் விடுதல், ஒரு பொருளை இறுதியாகக் கொடுத்தற்கு முன்னாளில் அறிகுறியா யிருந்தது. நிலம் முதலானவை விற்கும்போதும் இவ்வாறே நடந்தது. தண்ணீர்த் தாரையோடு கொடுத்தலால் இதற்குத் தாரா தத்தம் என்றுபெயர். (தத்தம் - கொடுத்தல்)
2. மதுபர்க்கமாவது: தயிர், தேன், சர்க்கரை, நெய்,பழம் சேர்த்துச் செய்யப்படுவது.
3. பூதமோதனமாவது பெரிய படையலான சாதம் முதலானவை.
4. நற் சகுனத்துக்காகப் போலும்.
5. மணமகளுடைய கைகீழாக மேல்நோக்கப் பிடித்தல் வேண்டும்.
6. இவ்வுண்மையை அறியாத மணமகன் பெண்ணினுடைய காலைத் தூக்கி வைக்கக் கூசுவதுமுண்டு. காலைத்தூக்கி வைத்தலால் மணமகன் தாழ்ந்து போகமாட்டான்.
7. அறுகானது நன்றாகப் பரவுந் தன்மையும் இலகுவில் அழியாமையையும் உடையதாதலால் இருவரது சந்ததியும் நன்றாகப் பெருகுதற்கும் நிலைத்தற்கும் அறுகினால் ஆசிர்வதிப்பர்போலும். அறுகிடுதல், கந்தபுராணம், வள்ளியம்மை திருமணப் படலத்திற் கூறப்பட்டிருக்கிறது: பத்ததி யிலில்லை.
8. ருதுவாகி மூன்று வருஷத்தில் விவாகஞ் செய்க என்று மநுஸ்மிருதி கூறும், (9 - 10), இதற்கு முன் செய்யவேண்டுமென்றும் விதிகளுண்டு.
9. இவ்வாறின்றிப் பிறநாட்டு நாகரிகத்தைப் பின்பற்றிக் கணவன் செல்லாவழிச் சென்று சுவதந் திரத்தைத் தேடி உழலுதல் சிறுதொழிலென்பதறிக.

**கலாநிதி செ.திருநாவுக்கரசு**
- விரிவுரையாளர்,ஆசிரிய கலாசாலை, கோப்பாய் -

# சைவ சமய வாழ்வு

இந்து சமயத்தின் அறுவகைப் பிரிவுகளும் பாரத நாட்டில் பலம்பெற்று விளங்குவது போன்று, ஈழநாட்டில் காணப்படுவதில்லை. இங்கு சைவசமயமே உயிர்ப்புடையதாக விளங்குகின்றது. ஏனைய இந்துசமயப் பிரிவினரின் முதன்மைத் தெய்வ வழிபாட்டினைச் சைவத்தினுள் உள்ளடக்கி, **"யாதொரு தெய்வங்கொண்டீர், அத் தெய்வ மாகி யாங்கே மாதொருபாகனார் தாம் வருவார்"** என்ற சிவஞானசித்தியாரின் கோட்பாட்டினைப் பின்பற்றும் வாழ்க்கை நெறியினை, ஈழத்துச் சைவர்கள் கடைப்பிடித்து வருகின்றார்கள். "சமயம்" என்பது வெறும் பேச்சளவில் நிற்பதல்ல, வெற்றுச் சம்பிரதாயங்களல்ல, சிந்தையாலும் செயலாலும் வாழும் வாழ்க்கையேயாகும். அத்தகைய வாழ்வானது தொன்றுதொட்டு ஈழநாட்டுச் சைவமக்களுக்கு வாய்க்கப் பெற்றது. அத்தூய்மையான சமயப் பண்பாட்டுச் செல்நெறியில் அறாத் தொடர்புடன் பயணிக்கும் பாக்கியம் சைவ மக்களுக்கு வாழ்வாதாரமாக அமைந்தது.

இராவணேஸ்வரன் காலம் முதலாகத் தொடங்கி, சம்பந்தர், சுந்தரர், அருணகிரிநாதர் ஆகியோரது தெய்வீகப் பனுவல்கள் மூலமாக நிலைபெற்று, இன்று வரையிலும் நின்று நிலைக்கின்ற வாழும் சமயமாக ஈழத்தில் சைவம் விளங்குகின்றது. அந்நியர்களின் ஆக்கிரமிப்புக்களில் நின்றும் தன்னைத் தூய்மைசெய்து, தப்பிப் பிழைத்துப் பல சவால்களுக்கு முகங்கொடுத்து நிற்கும் வாழ்க்கை நெறியாகச் சைவசமயம் உயர்ந்துள்ளது. ஈழத்தில் தொகையளவில் இரண்டாவது பெரிய எண்ணிக்கையினராகிய தமிழர்களில் பெரும்பான்மையோரால் பேணப்படும் மதம் சைவமாகும். **"முன்னைப் பழைமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பெற்றியனாக"** உணரப்படும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் கீர்த்தியுடைய மக்களது அரியபொக்கிசமாகச் சைவசமயம் காணப்படுகிறது. **"அன்பே சிவம்"** என்னும் திருமந்திரத்தின் உட்கிடக்கையே சைவ சமயத்து வாழ்வினது உட்பொருளாகும். ஆன்மீகத்தின் உச்ச எல்லையில் உணரப்படுவது அதுவேயாகும். சைவசமய வாழ்வின் சகல கூறுகளையும் இணைத்துவைப்பதும் அன்பேயாகும். பல வண்ணப் பூக்களைத் தொடுத்து மாலையாக்கும் நாராகச் சைவ வாழ்வை வளம்படுத்துவது எல்லையில்லாத தூய பேரன்பின் வெளிப்பாடு எனலாம். பிற உயிர்களிடத்தில் காட்டும் அன்புதான் இவ்வுலக வாழ்வுக்கும், மறுமை வாழ்வுக்கும் இயங்குதளம் என்பதைச் சைவ சமயிகள் எப்போதே உணர்ந்துள்ளனர். அன்பின் வலைதனில் அகப்படும் ஆரமுதாக இறைவனைக் கண்டு நெக்குருகியுள்ளனர். இறைவனின், உயிர்களிடத்தான அன்பினுக்கும், மனிதனின் இறைவன் மீதான அன்பினுக்கும் இடைவெளி கண்டு, அதனை நிரப்ப இதயத்தால் முனைந்துள்ளனர்.

**"அன்பினா லடியேன் ஆவியோ டாக்கை**
**ஆனந்த மாய்க் கசிந்துருக**
**என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்**
**யானிதற் கிலனோர் கைம்மாறே"**

என அழுதழுது இறைவனிடம் ஆட்பட்டார் மணிவாசகப் பெருமான்.

**"யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்**
**வையகமே"**

எனப் பேசினார் திருமூலர். **"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"** என்றார்

தாயுமானசுவாமிகள். **"என்கடன் பணி செய்து கிடப்பதே"** என்னும் அருள் வாக்கு அப்பர் அடிகளாருடையது. **"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார், ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும், கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"** என்று பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் குறிப்பிடும் இறையன்பு மீதூரப் பெற்றவர்கள் இத்தகையவர்களே. முற்றும் துறந்த ஞானி கூடப்பெற்ற தாயினை வழிபடும் பெருமை யால் சிறந்தது சைவசமயம். **"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"** என்றவாறு சகல தராதர மக்களுக்கும் சமத்துவ வாழ்வைக் கூறியது சைவம். **"நாம் யார்க்கும் குடியல்லோம்", "அஞ்சுவது யாதொன்று மில்லை, அஞ்சவருவதுமில்லை"** எனப் புரட்சிபேசிய மெய்யன்பர்கள் சைவசமயத்தை வாழ்வித் தனர். அந்த நீடிய நெறியே சைவ மக்களை இன்றளவும் உயிர்த்துடிப்புடன் சைவசமயிக ளாக வாழச்செய்கிறது. ஆறுமுகநாவலரால் மீளுருவாக்கம் செய்யப்பட்டு, அவரது பரம்பரையில் வந்தவர்களால் போற்றி வளர்க்கப்பட்டது ஈழத்துச் சைவம். சைவ சமய வாழ்வினுக்கு இடையூறு ஏற்பட்ட போதெல்லாம், அதனை வாழ்விப்பதற்கான முயற்சியில் பல சைவாபிமானிகள் முனைப் புடன் செயற்பட்டனர். யாழ்ப்பாண மண் இத்தகைய போராட்டங்களில் வீறுகொண்டெ ழுந்து பங்களிப்புச் செய்துள்ளது. அந்நியத் தின் சைவத்துக்கெதிரான ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தும் பணியில் யாழ்ப்பாணப் பிரதேசிகளின் பங்களிப்புப் பாரியது. இதில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை, திரு நெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆகிய சைவ நிறுவனங்கள் குறிப்பிடத் தக்கவை.

யாழ்ப்பாணத்துக் கலாசார மரபுப் பேணலுடன் சம்பந்தமுடைய செயற்பாடுகள் பல சைவர்களின் வீட்டுக்குரிய நுழைவாச லில் சிறிய பந்தலிடல், மிருகங்கள் நீரருந்தத் தண்ணீர்த் தொட்டியமைத்தல், சுமைதாங் கிகள், ஆவுரஞ்சிக் கற்கள் முதலானவை நட்டுவைத்தல், தாகசாந்திக் கைங்கரியஞ் செய்தல், மாகேசுர பூசை இயற்றல், பண்டி கைகள் - விரதங்கள் முதலானவற்றை அனுட் டித்தல் முதலான அனைத்தும் அறத்தின் வழியமைந்த யாழ்ப்பாணத் தமிழ்ச் சைவர் களின் வாழ்க்கை அனுபவங்களாகும்.

யாழ்ப்பாணத்துக்கே உரித்தான கந்தபுராண கலாசார வாழ்வு இன்றும் தொடர்கிறது. நாவலர் வழிநின்ற பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை போன்றோர்களால் உரமும், உலகியல் திறமும் பெற்றது கந்த புராணப் பண்பாடு. ஈழத்துச் சைவ மக்கள் பேணிய மரபுவழி விழுமியங்கள் யாவும் மன்னுயிர் ஈடேற்றப் பெற உதவுபவை. **"எப்பவோ முடிந்த காரியம்", "இனியொரு பொல்லாப்புமில்லை"** எனக் கூறிய சித்தர்களின் மெய்ந்நெறி பிரகாசித்தது யாழ்ப்பாண மண்ணில். இறையனுபூதிமான்கள் கொலு விருக்குமிடமாக அது விளங்கியது. இதனாற் றானோ திருமூலர் ஈழத்தைச் "சிவபூமி" எனச் சிறப்பித்தாரோ?

இத்தகைய பெருமைக்குரிய தமிழர் களின் சைவ வாழ்வில் இன்று காணப்படும் சிதைவுகளும், அசைவுகளும் வேதனையூட்டு பவைகளாகும். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்தில் நீடித்த உள்நாட்டுப் போரினால் தமிழர்களே அதிகம் பாதிக்கப் பட்டனர். உயிரிழப்பு, உடைமை அழிவு, இடப்பெயர்வு, புலம்பெயர்வு எனவெல்லாம் தமிழர் சமூகம் அவதிப்பட்டது. இந்த அவலங்கள் தந்த பரிசாக, கோரயுத்தத்தின் வடுக்களாகப் பண்பாடு பறிபோதல், பண்பாட்டுச் சீரழிவு, பணமே பிரதான இலட்சியமாதல், விழுமியங்களை விமர்சித் தலும் புறக்கணித்தலும், பிற சமயங்களைத் தழுவுதல் முதலான செயற்பாடுகள் சைவ மக்களிடையே நிகழத்தொடங்கின. அறிவு என்பதும், கல்வி என்பதும் வணிக நோக்கு டைய பொருள்களாயின. சமயம் என்பது சில நிமிடங்கள் பேசப்படும் பொழுதுபோக்கு விடயமாக மாறத் தொடங்கிற்று. இருளிலி ருந்துகொண்டு இருளை நீக்குமாறு

குரல்கொடுப்பதால் பயனில்லை. இருள் அகலவேண்டுமாயின் ஒளியைக்கொண்டு வருதல் வேண்டும். உண்மையான சைவசமயிகளின் பணி அதுவாகத்தானிருக்கும். இளைய சமுதாயத்தை ஈர்த்துவைத்துள்ள சனரஞ்சகமான கவர்ச்சிகள் விலக வேண்டும். முதியவர்கள் தாமுந்திருந்தி, இளையவர்களுக்கு வழிகாட்டவேண்டும். 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு யாழ்ப்பாணத்தில் மட்டும் ஐந்நூறுகோடி (5000 மில்லியன்) ரூபாவுக்கு மேலான பெறுமதி கொண்ட சைவாலயத் திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. ஈழத்தில் யுத்தகாலத்தின்போது அழிக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட சைவக்கோயில்கள் அண்ணளவாக மூவாயிரம் ஆகும். புதிய ஆலயங்கள் அமைப்பதை விடுத்துப் புராதன ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்யவும், நித்திய பூசைகள் நடத்திப் பேணவும் சைவர்கள் துடிப்புடன் செயலாற்ற வேண்டும்.

சைவ சமய வாழ்வு என்பது மனத்தாலும், மொழியாலும், செயலாலும் ஒருமித்ததாக மிளிரவேண்டும். இளையவர்பால் சமய நம்பிக்கைகள் ஊட்டம்பெற வேண்டும். இறை நம்பிக்கையின் அடித்தளத்தில், அறவளியில் சைவர்களின் வாழ்வியற் கோலங்கள் புனையப்படவேண்டும். சமய வாழ்வின் மகத்துவத்துக்குக் கல்வியின் துணை பாரியது. கல்வி நிறுவனங்கள் தம்பணியுணர்ந்து கலைக்கோயில்களாகவும், மனக்கோயில்களாகவும் திகழவேண்டும். சமூகத்தின் மையவிடமாகச் சைவாலயங்கள் மீண்டும் சோழர் காலத்தை நினைவூட்டிப் பணிசெய்து பயன்பெறவேண்டும். அப்போது திறவாத இதயங்கள் யாவும் இறைவனை நோக்கித் திறந்துகொள்ளும். அன்புநெறியின் பரவல் அதிகரிக்கும். பிறர் துன்பங்கண்டு இரங்கும் நெஞ்சம் கனியும். பிறவிப் பயனும் சைவ வாழ்வினால் எய்தப்பெறும்.

## தீபசோடச உபசாரப் பயன்

1. தூபம் – உற்சாகத்தைத் தரும்
2. ஏகதீபம் – வீழிப்பைத் தரும்
3. ஆலிங்கார தீபம் – சாம்ராஜ்யத்தைத் தரும்
4. நாகதீபம் – லோகாதிபத்யம் தரும்
5. ரிஷப தீபம் – அரசை அளிக்கும்
6. புருஷாமிருகதீபம் – தீபம்
7. குலதீபம் – வயிற்றுவலி நீங்கும்
8. ஆமைதீபம் – ஜலகண்டத்தை தடுக்கும்
9. கஜதீபம் – ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும்
10. சிம்மதீபம் – ஆயுளைக் கொடுக்கும்
11. வியாக்ரதீபம் – விலங்குகளிடத்தில் பயத்தைப் போக்கும்
12. கொடிதீபம் – சோலையைத் தரும்
13. மயில் தீபம் – புத்திரப்பேறு அளிக்கும்
14. பஞ்சதட்டுடன் கும்பம் – சாம்ராஜ்ஜமளிக்கும்
15. நஷத்திரதீபம் – பாதுகாப்பு
16. மேருதீபம் – எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும்

திரு.க.சிவராமலிங்கம்
- முன்னாள் பிரதி அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி -

# அறிவியலும் அருளியலும்.

அறிவியல் வளர்ச்சியால் பல அரிய செய்திகளை அறிந்துள்ளோம். அறிந்து கொண்டுமிருக்கின்றோம். இதனால் பெறப்படும் வாழ்க்கை வசதிகளை துய்த்து மகிழ்ந்து வருகிறோம்.

உலகம் மிகச்சுருங்கிவிட்டது. ஆயிரம் ஆயிரம் மையில்கள் தொலைவில் உள்ள நாடுகளில் நடப்பவை எல்லாம் எமது மேசையில் காண்கிறோம், கேட்கிறோம்.

மட்டுமா? நவக்கிரகங்கள் என எம்மால் வணங்கப்படும் கோள்களையும் சென்றடையும் வாய்ப்பையும் அறிவியல் தந்திருக்கிறது.

மட்டிலா மகிழ்ச்சிதான் யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இந்த அதி வேக அறிவியல் வளர்ச்சி எதையோ மறைத்து விட்டது. மறக்கவும் செய்துவிட்டதோ? என்ற ஏக்கம் பலர் சிந்தனையில்....

நியாயமான ஏக்கம் தான்! எல்லாம் இருக்கவும், மனிதன் ஏதோ ஒன்றைத் தொலைத்துவிட்டதாக உணர்ந்து ஏங்குகிறான். - ஏன்?

ஒருவன் ஓடுகிறான், குதிக்கிறான், பாய்கிறான், விளையாட்டுப்போட்டிகளில் பரிசில்கள் பெறுகிறான்.

ஏன்? மாடமாளிகைகள் கட்டி மகிழ்ந்து வாழ்கிறான். எல்லாமே தன்னால் முடிந்தவை என்று நிமிர்ந்து நிற்கிறான். பாவம்! இவன் மமதை கண்டு ஒன்று மெல்ல நகைக்கிறது. அது, மெல்ல நகைப்பதால் அவனுக்குக் கேட்கவில்லை. ஒரு சிலருக்குக் கேட்கத்தான் செய்கிறது.

இச்செயல்களுக்கும், வெற்றிகளுக்குமெல்லாம் காரணமான **நிலம்** மெல்ல நகைக்கிறது. அறியாமைகண்டு வருந்தவும் செய்கிறது. "**நிலம் எனும் நல்லாள்**" எம்மையும் எமது ஆற்றலையும் வெற்றிப் பெருக்கின் வரம்பையும் ஒரு சிலர் எண்ணிப் பார்த்தார்கள். எண்ணிப்பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் "சாதாரணர்கள்" அல்ல

அறிவியல் வல்ல ஆன்றோர்கள் அணுவில் அற்றலை அறிந்தவர்கள் அணுவாற்றலை தம் அடிமையாக்கியவர்கள். "விடு என்னை என்று விலகத்துடிக்கும் **உயிரை** கட்டி நிறுத்தி உடலை மேலும் சில காலம் வாழவைக்கும் அறிவியல் வல்லோர். இவர்கள் தங்கள் அறிவியல் ஆற்றலின் எல்லை தெரிந்தவர்கள். எல்லை தெரிந்தமையால், எல்லை இலா ஆற்றல் ஒன்று இருக்கவே செய்கிறது என்பதை உணர்ந்தவர்கள்.

மனத்தூய்மையுடன் தங்கள் கருத்தைச் சொல்லியும் வருகிறார்கள். அறிவியலின் அதீத வளர்ச்சிக்கு வித்திட்ட அறிவியல் மேதைகளின் தலைவர் என்று போற்றப்படும் அல்பேட் அயன்ஸ்ரயின்,

**"Where Science Ends**
**There Religion begins"** என்கிறார்.

எங்கு அறிவியல் செயலற்று நிற்கிறதோ அங்கு அருளியல் (சமயம்) ஆரம்பமாகிறது எனக்கொள்ளலாம்.

தொடர்ந்து வந்த அறிவியலார் இக் கருத்தை அரண் செய்கிறார்கள். ஆகாயப் பெரு வெளியையும் கோள்களையும் ஆய்வு செய்தவர்கள் முடிவில் தங்கள் ஆற்றலின்

எல்லை தெரிந்து இதை ஆற்றலை ஏற்க வேண்டியுள்ளது என்கிறார்கள்.

**"வீரீக்கிற் பெருகும் "**

ஒன்றை நாம் தீர்க்கமாகப் புரிந்து கொண்டால் தொல்லை இல்லை.

அறிவியலுக்கும் அருளியலுக்கும் என்றுமே போட்டி இல்லை. இதனால் மூட நம்பிக்கைகளை அருளியல் ஏற்றுக்கொள் கிறது. வளர்க்கிறது என்று கொள்ளற்கு எத்தகைய ஆற்றல் மிகுந்த அறிவியலா ளனின் , செயற்பாட்டையும் மேற்பார்வை செய்ய ஒருவன் இருக்கவே செய்கிறான்.

இதேபோன்று எமது செயல்களின் தன்மை தெரிந்து, நிறை செய்து பயன் வளங்க ஒருவன் உளன் என்ற எண்ணம் எம்மை நிறைவழி நிற்கப் பெரிதும் உதவும். இக்கருத்தை மெய்யியல் மேதை S.M.Jode வலியுறுத்தியுள்ளார். இதையே வள்ளுவப் பெருந்தகை இரத்தினச் சுருக்கமாக **"வகுத்தான் "** என்கிறார்.

நாம் தொகுக்கிறோம். தொகுக்கும் போது "சப்பட்டையும்" சேரலாம். பதர் போக்கி நெல் மணி பொறுக்கித் தரும் "பொறுக்கி" ஒருவன் உண்டு என்பதை அறிவியல் உலகம் ஏற்றுக்கொண்டு விட்டது. கப்பலுக்கு மீகாமன் அவசியம், கல்லூரிக்கு அதிபர் அவசியம், வீட்டுக்கு இல்லாள் அவசியம். நாட்டுக்கு நல்ல தலைவன் அவசியம். இவைபோல 'தாயினும் நல்ல தலைவன்' என்று அடியார் போற்றும் இறை உணர்வை வளர்த்து உயிருக்கு அரண்செய் வதே **அருளியல்**.

புரிந்தவர்கள், அறிவியலிலும் அருளியல் பேணுவார்கள். புரியாதவர் தம் பேதமை கண்டு **"ஓடி மீழ்கென ஆடல் பார்தருப்பான் "** எம் இறை.

**"தெய்வமென்பதோர் சித்தம் "** உண்டாவதாக.

## அறங்கள் முப்பத்து இரண்டு (32)

1. ஆதுலர்க்குச்சாலை
2. ஓதுவார்க்குணவு
3. அறுசமயத்தோர்க்கு உண்டி
4. பசுவிற்கு வாயுறை
5. சிறைச்சோறு
6. பீச்சையிடுதல்.
7. தின்பண்டம் நல்கல்
8. அறவைச்சோறு
9. மகப் பெறுவித்தல்
10. மகவு வளர்த்தல்
11. மகப்பால் வளர்த்தல்.
12. அறவைப் பிணஞ்சுடுதல்
13. அறவைத் தூரியம்
14. சுண்ணம்
15. நோய் மருந்து
16. வண்ணார்
17. நாவிதர்
18. கண்ணாடி
19. காதோலை
20. கண்மருந்து
21. தலைக்கெண்ணெய்
22. பெண்போகம்
23. பிறர்துயர் காத்தல்
24. தண்ணீர்ப்பந்தல்
25. மடம்
26. தடாகம்
27. பூஞ்சோலை
28. ஆவுருஞ்சு தளிநாட்டல்
29. விலங்குகளுக்கு உணவுகொடுத்தல்
30. ஏறுவித்தல்
31. விலை கொடுத்துயிர் வீடுத்தல்
32. கன்னிகாதானம்

உ

ஸ்ரீ கற்பகவிநாயகர் துணை

# நன்றிகள் என்றென்றும்.

எல்லாம்வல்ல விநாயகர் திருவருளால் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பொன்விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், அவ் விழாச் சார்பாக மலருவது பொன்விழாச் சிறப்பு மலர். இம் மலரை மலர்விப்பதற்குக் கழக நிர்வாகிகளும், மலர்க் குழுவினரும் அரியபல பணிகளைப் புரிந்துள்ளார்கள். அவர்களின் ஊக்கமான பணியினை மலரிற் காணலாம்.


இம்மலருக்கு ஆசியுரை, பிரார்த்தனையுரை, கட்டுரை முதலியவற்றை ஆக்கியளித்த அறிவுடைச் சான்றோர்க்கும், விளம்பரம் நல்கிய பெருந்தகை வள்ளல்க ளுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இக் கழகத்தின் பணிகளை ஓரளவு கருத்திற்கொண்டு எதிர்கால இளைஞர்களை யும் - சிறார்களையும் பணிசெய்யத் தூண்டுதற்குரிய அம்சங்களை மலரில் கண்டுகொள்ளலாம்.

மேலும் இம்மலரினைச் சிறப்புற அச்சேற்றித் தந்த கஜன் பிரிண்டேஸினருக்கும், ஏனைய அன்பர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

வணக்கம்.

22.03.2004



சைவப்புலவர் வ.கந்தசாமி.
இரா.செல்வவடிவேல்.
மலராசிரியர்கள்.

# அமரத்துவம் அடைந்த
# ஆயுட்கால
# அங்கத்தவர்கள்



அமரர் க.நடசேன்
17.10.1997



அமரர் கு.ஞானேந்திரன்
10.09.1999



அமரர். வ. குணசேகரன்
20.02.2000



அமரர். அ. சத்தியமூர்த்தி
18.01.2001



ஆமரர். க. ஜீவகாருண்யன்
01.05.2002

உ

# வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம்

## ஆயுட்கால அங்கத்தவர்கள்

01. **திரு.வீ.தயாபரன்,**
*166/3, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

02. **திரு.மு.கணேசலிங்கம்,**
*142, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

03. **திரு.க.நடேசன்,**
*23,கோபால் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
*(17.10.1997 இல் காலமாகிவிட்டார்)*

04. **திரு.க.சிவநேசன்,**
*63, கடையிற்சுவாமியார் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

05. **திரு.த.கருணாமூர்த்தி,**
*93/7, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

06. **திரு.சோ.மகாலிங்கம்**
*958/32, தலையாழி லேன்,*
*யாழ்ப்பாணம்.*

07. **திரு.அ.சத்தியமூர்த்தி,**
*12/2, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(18.01.2001 இல் காலமாகிவிட்டார்)*

08. **திரு.பொ.ஏரம்பமூர்த்தி,**
*68G, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

09. **திரு.தி.தெய்வேந்திரராசா,**
*152, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

10. **திரு.நா.லோகநாதன்,**
*132, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

11. **திரு.ச.இராசரத்தினம்,**
*185 (49), நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

12. **திரு.இ.விஜயரத்தினம்,**
*837, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

13. **திரு.அண்ணாமலை முருகன்,**
*294,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

14. **திரு.த.அருள்ராஜசிங்கம்,**
*40/2, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

15. **திருமதி யோ.ஜெயந்தி,**
*187,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

16. **திரு.க.ஜீவகாருண்யம்,**
*187,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(01.05.2002 காலமாகிவிட்டார்)*

17. **திரு. தி. ஜெயராசா,**
63,B.A.தம்பி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

18. **திரு. சி. சிவமூர்த்தி,**
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

19. **திரு. வ. குணசேகரன்,**
318, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(20.02.2000 இல் காலமாகிவிட்டார்)

20. **திரு. வே. மனோகரன்**
334, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

21. **திரு. ஜெ. பாலமுரளி,**
304,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

22. **திரு. ச. அற்புததேவராசா,**
198 (404), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

23. **திரு. ந. இரகுநாதன்,**
357,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

24. **திரு. க. இராசரத்தினம்,**
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

25. **திரு. ந. ஜெகன்மோகன்,**
283, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

26. **திரு. வி. தயானந்தன்,**
166/3, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

27. **திரு. கு. நித்தியானந்தன்,**
384,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

28. **திருமதி க. தேவிமலர்,**
170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

29. **திரு. கு. சிவராஜசர்மா,**
பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி, கோப்பாய்.

30. **திரு. இரா. செல்வவடிவேல்,**
46, பிரப்பங்குளம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

31. **திரு. சி. பகீரதன்**
319,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

32. **திரு. ம. பத்மநாதன்,**
133, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

33. **திரு. கு. ஞானேந்திரன்,**
158/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(10.09.99 இல் காலமாகிவிட்டார்)

34. **திரு. பொ. கல்யாணசுந்தரம்,**
346,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

35. **திரு. ச. சிவராசன்,**
70,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

36. **திரு. க. நவரத்தினம்,**
169, செட்டியார் தெரு,
கொழும்பு - 11

37. **திரு. சி. சிவகுமாரன்,**
370/1,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

38. **திரு. மு. கணேசராசா,**
145/5, பிரப்பங்குளம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

39. **திரு. கனக. ஸ்ரீதரன்,**
கனடா

40. **திருமதி. க. இராசம்மா,**
கனடா

41. **திருமதி ப. யசோ,**
ஜேர்மனி.

42. **திரு. தே. ஜெயராமன்,**
அவுஸ்திரேலியா,

43. **திரு. செ. மகாராஜா,**
லண்டன்.

44. **திரு. க. பாலேந்திரன்,**
நோர்வே.

45. **திரு. சு. ஸ்ரீகாந்தன்,**
424, 1/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

46. **திரு. மு. பழனிச்சாமி,**
108,சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

47. **திரு. பா. பாலகுகன்,**
12,கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

48. **திரு. சொ. சபேசன்,**
29,கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

49. **திரு. இ. தேவகுமாரன்,**
32/12, ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

50. **திரு. சொ. முகுந்தன்,**
29,கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

51. **திரு. வ. கந்தசாமி,**
125, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

52. **திரு. க. இராஜேந்திரன்,**
பிரான்ஸ்.

53. **திரு. சி. அகிலன்,**
கனடா.

54. **திரு. வே. சாம்பசிவம்,**
9/2, கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

55. **திரு. சா. சுதர்சன்,**
9/2, கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

56. **திரு. R.V.S.** பாலசுப்பிரமணியம்.
167, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

57. **திரு. சு. செல்வராசா,**
கனடா.

58. **திரு. செ. சுப்பிரமணியம்,**
424,1/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

59. **திரு. இ. சண்முகலிங்கம்,**
198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

60. **திரு. சி. சோமேஸ்வரபிள்ளை,**
37/3, மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.

61. **திரு. சு. நாகேஸ்வரன்,**
கனடா.

62. **திருமதி நா. உஷா**
கனடா.

63. **திரு. சு. சதீஸ்வரன்,**
கனடா.

64. **திருமதி செ. தவமணி,**
கனடா.

65. **திரு. வி. ரவிமோகன்,**
837, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

66. **திரு. பா. கோபிநாத்.**
155,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

67. **திருமதி இ. சிவஞானவதி,**
185, (149) நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

68. **திரு. க. அருள்நேசன்,**
11,கஸ்தூரியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

69. **திரு. பா. பாலகிருஷ்ணன்,**
167 (117), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

70. **திரு. சு. கந்தசாமி,**
167 (117), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

71. **திரு. பா. சரவணபவன்,**
167 (117), நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

72. **திருமதி கை. கிருபாகரி,**
கனடா.

73. **திருமதி. வ. சிவகிருபா,**
லண்டன்.



தயூரா
நகைப் பூங்கா
அழகிய
கலைநயம்......
எழிலுறு
தொழில் வளம்......
உயர்தரமிகு
தங்க நகைகளுக்கு....
213C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 2225846
Hot Line: 077 - 7840379

பொன்விழா மலர் சிறக்க வாழ்த்துகின்றோம்...

# சிறி மதனா
## நகை மாளிகை

எழிலுறு தரமான தங்க நகைகளுக்கு

இல.155/M, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

Phone: 021 - 222 5526, 0777 - 300185

கிளை:

# மதனா ஜுவல்லரி

தங்கப்பவுண் வியாபாரம்

177/3, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

பொன்விழா வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!





காலத்தால் அழியாத

கற்பனைக்கும் எட்டாத

எழில் குன்றா அற்புதப் படைப்புகள்

பார்ப்பவர் கண்களில் பளிச்சிடும்

அசல் ரகங்கள் குறிப்பிட்ட தவணையில் தரமாகவும்

நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்

# சாரங்கன் நகை மாடம் அன்ட் சென்ரர்.

இல. 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

222 6059

# சாரங்கா நகை மாடம்

157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

222 2480, 6972

# அருள்முருகன் நகை மாடம்

96/1., கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


பொன்விழா சிறக்க வாழ்த்துகின்றோம்...
Lalitha
Jewellery
லலிதா ஜுவல்லரி
Genuine Kt.Jewellery.
Manufacturing Jewelery
213-B. KASTHURIAR ROAD.JAFFNA.TELE:021 - 2222863.0777-110107
Lalitha

# விநோ நகைப் பூங்கா

## தங்க, வைர நகை வியாபாரம்



PHONE:
2222824
2225394

**நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்**

**22கரட் தங்க நகைகள் குறித்த தவணையில்**
**உத்தரவாதத்துடன் செய்து**
**கொடுக்கப்படும்.**



## 185,177/4, கஸ்தூரியார் வீதி
## யாழ்ப்பாணம்.

# 'கல்யாணி ஸ்பெஷல்' சுவைத்து மகிழுங்கள்.

**எல்லா வகையிலும் தரமான சுவையுள்ள**





ஐஸ்கிறீம் வகைகள்

ஐஸ் சொக்



ஐஸ் பழம்

ஐஸ் ஜெலி

சொக்லட் கிறிப்ஸ்

குளிர்பான வகைகள்



மற்றும்



**சுவீற் வகைகள்,**

**பற்றிஸ்,**

**சகலவிதமான கேக் வகைகள்,**



**சிற்றுண்டி வகைகளும்**

களியாட்டங்கள், விழாக்கள் அனைத்துக்கும் தேவையான உணவு வகைகள் அனைத்தையும் குறித்தநேரத்தில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.



**"இன்றே விஜயம் செய்யுங்கள்"**




# கல்யாணி கிறீம் ஹவுஸ்

**73, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

வண்ணை
சாந்தையர்மடம் ஸ்ரீகற்பகவிநாயகர்
சைவசமய அபிவிருத்திக்கழகத்தின்
பொன்விழா
கற்பகவிநாயகர் துணையுடன்சிறப்புற வாழ்த்துகின்றோம்.

# விமலா ஸ்ரோர்



உங்கள் இல்லங்களுக்குத் தேவையான அனைத்துப்
பலசரக்குச் சாமான்களையும்,
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்

## விமலா ஸ்ரோர்

275,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 - 2222677

வண்ணை - ஸ்ரீ கற்பக விநாயகர் அருளுடன்
பொன்விழாச் சிறக்க வாழ்த்துகிறோம்.



# சிறி நதியா
## நகை மாளிகை

22 கரட் தங்க நகைகள் நவீன அழகிய
டிசைன்களில் உறுதியுடனும் உத்தரவாதத்துடனும்
பெற்றுக்கொள்வதற்கு உகந்த ஸ்தாபனம்

சிறி நதியா நகைமாடம்

நங்கையர் வீரும்பும் நவநாகரீக
வடிவங்களை நம்பிக்கையுடன் செய்து
பெற்று நலம்பெற நாடவேண்டியது,

இல.01,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 - 222 2709
(வின்சர் தியேட்டர் அருகே)



கிளை:

# சானுயா
## நகை மாளிகை



இல.1/2,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Best with Compliments from
KANESAN STORES
Wholesale
&
Retail
Dealers
in
Textiles
Specialist
in
Wedding Sarees
201, K.K.S.Road,Jaffna, Sri Lanka. Tel.No: 021 - 222 2830

மலர்சிறக்க வாழ்த்துகிறோம்....

# நதியா நகை மாடம்

மனம்கவரும் நகைகள்

உறுதியுடனும்,

உத்தரவாதத்துடனும்

பெற்றுக்கொள்ள

உகந்த இடம்



இல:02,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 - 222 3479

கிளை:

## நதியா நகைமாடம்

இல:149,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## நிதியா நகைமாடம்

இல:99,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கவுசன் நகைமாடம்

இல:129,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
சண்முகம் இராஜேஸ்வரன்

எம் இனிய பொன்விழா நல்வாழ்த்துக்கள்..

வண்ண வண்ண ஆடைகள் எத்தனையோ அத்தனையும்

உங்கள் எண்ணம்போல் தெரிவுசெய்திட யாழ் நகரில்

# கோபிகா அடையகம்

இல. 5/4, நவீனசந்தை உட்புறம்.
யாழ்ப்பாணம்



ஆண், பெண், சிறுவர் சிறுமியருக்கான
ரெடிமேட் ஆடைகள்

சேட், T.சேட், ரவுசர்

சல்வார் கமிஸ்,

ஸ்கேட் அன் பிளவுஸ்

மற்றும் கண்ணைக்கவரும்

உங்கள் ஆடைத் தெரிவுகளுக்கு

# கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்

இல. 22(92), நவீனசந்தை,பெரியகடை வீதி.
யாழ்ப்பாணம்